Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 தை 13 ஞாயிற்றுக்கிழமை (27.01.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 62

# வன்னியில் உயர் மட்டத் தலைவர்களை இலக்கு வைத்துத் தாக்குதல் ஆரம்பமாம்

## கோத்தபாய ராஜபக்ஷ சொல்கிறார் புலிகளைத் தடைசெய்யவும் வலியுறுத்து



கொழும்பு,ஜனவரி27

வன்னிப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் உயர் மட்டத் தலைவர்களை இலக்கு வைத்து அரச படையினர் நான்குமுனைத் தாக்குதல்களை ஆரம்பித்து விட்டனர். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மணலாறு ஆகிய நான்கு முனைகளிலிருந்தும் திட்டமிட்ட முறையில் தாக்குதல்களைப் படையினர் தொடங்கி விட்டனர். அதனை நிறுத்தும் உத்தேசம் எதுவும் எமக்கு இல்லை.

இவ்வாறு ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அத்தோடு, விடுதலைப் புலிகளைத் தடை செய்யவேண்டும் என்றும் அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

'லங்காதீப' சிங்கள வார இதழுக்கு அளித்த செவ்வி ஒன்றிலேயே இவற்றை அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ தமது செவ்வியில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் மற்றும் இரண்டு அல்லது மூன்று உயர்மட்டத் தலைவர்களையும் ஒழித்துக் கட்டுவதற்கு இராணுவம் இலக்கு வைத்துள்ளது. அவர்களின் தலைமைத்துவத்தைத் தீர்த்துக் கட்டிவிட்டால் விடுதலைப் புலிகள் வீழ்ந்து விடுவார்கள்.

விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும். அவர்களை அழித்து விடுவதே எமது நோக்கம். - என்றார்.

இதேவேளை, அனைத்துக் கட்சிப் பிரதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## தபால் பொதிகள் இன்று கப்பலில் எடுத்துவரப்படுகின்றன

யாழ்ப்பாணம்,ஜன.27

திருகோணமலையில் கடந்த 20 நாள்களாக தேங்கிக் கிடந்த 600 தபால் பொதிகள் 'நிமாலவ' என்ற கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படுகின்றன.

யாழ்.பிராந்திய பிரதித் தபால்மா அதிபர் எம்.குமரகுரு இத்தகவலைத் தெரிவித்தார்.

பயணிகள் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டதையடுத்து, திருகோணமலையில் தபால் பொதிகள் தேங்கியிருந்தன.

தபால்மா அதிபர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் தொடர்புகொண்டு எடுத்த நடவடிக்கையின் பயனாக தபால் பொதிகளை எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது.

இந்தத் தபால் பொதிகள் திருகோணமலை தபாலக ஊழியர்களால் நேற்றுமுன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் நேற்றும் விமானக் குண்டுத் தாக்குதல்

கிளிநொச்சி,ஜன. 27

இலங்கை விமானப் படையின் ஜெட் விமானங்கள் நேற்று சனிக்கிழமை பிற்பகல 1.10 மணியளவில் புதுக்குடியிருப்பில் கடும் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

'வெண்புறா' நிறுவனத்தின் வளாகத்திலும் கைவேலி மக்கள் குடியிருப்புப் பகுதியிலும் குண்டுகள் வெடித்து சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

பல கால்நடைகள் கொல்லப்பட்டதுடன் பயன்தரு மரங்களும் அழிந்தன என்று வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

கைவேலி, கணேசா வித்தியாசாலையில் விசேட கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் இதனால் பாதிககப்பட்டதுடன் சிலர் பயப்பீதியால் மயக்கமுற்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், புதுக்குடியிருப்புக்குத் தெற்கில் உள்ள கடற்புலிகளின் தலைமையகம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் கைதான தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி தொழில் மறுப்புப் போர்!

இராமேஸ்வரம்,ஜன.27

நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் பிரவேசித்து மீன்பிடித்துக் கொண்டிருந்த போது ஸ்ரீலங்கா படையினரால் கடந்த 21ஆம் திகதி கைது செய்யப்பட்ட 12 தமிழக மீனவர்களையும் உடனடியாக விடுவிக்குமாறு கோரி தமிழக மீனவர்கள் தொழில் மறுப்புப் போராட்டங்களில் இறங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை தொடக்கம் தமிழக மீனவர்கள் எவரும் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லவில்லை. எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் 12 மீனவர்களும் விடுவிக்கப்படாவிட்டால் இராமேஸ்வரத்தில் வீதி மறிப்புப் போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தமிழக மீனவர்கள் முடிவு செய்திருப்பதாகத் தகவல்கள் தெரிவித்தன. (12ஆம் பக்கம் பார்க்க)

## சகல இனமக்களுக்கும் ஏற்புடைய அரசியல் தீர்வு ஒன்றே இங்கு தேவை

### இந்தியத் தூதுவர் அறிக்கை

கொழும்பு,ஜன.27

இலங்கையில் வாழும் சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் அரசியல் தீர்வு காணப்படவேண்டும். இதுவே இந்தியாவின் நிலைப்பாடாகும்.

இந்தியாவின் 59 ஆவது குடியரசு தினத்தையொட்டி இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் நேற்று விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்படவேண்டும். அது இங்கு வாழும் சகல இனமக்களுக்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ரூபவாஹினியின் செய்தியாளர் தாக்கப்பட்டார்

கொழும்பு,ஜன.27

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் செய்தியாளர் ஒருவர் கொழும்பில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

செய்தியாளர் தனது வாகனத்தில் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்து வழிமறித்த இனந்தெரியாத இருவர் அவரைத் தாக்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

தாக்கப்பட்ட செய்தியாளர் லால் ஹேமந்த மாவலகே கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பாக ஹோமாகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட சடலங்களை இனங்காண மன்னார் வாசிகளுக்கு அனுமதியில்லை!

கொழும்பு,ஜன. 27

கெப்பிற்றிக்கொலாவப் பகுதியில் மீட்கப்பட்ட சடலங்கள், மன்னாரில் காணாமற் போனவர்களுடையனவா என்று இனங்காணபதற்காகச் சென்ற உறவினர்களை அவற்றைப் பார்வையிட விடாது தடுத்தனா பொலிஸார்.

அனுராதபுரம், கெப்பிற்றிக்கொலாவப் பகுதியில் இரண்டு புதைகுழிகளில் இருந்து சூட்டுக்காயங்களுடன் 16 ஆண்களின் சடலங்கள் வியாழக்கிழமை மீட்கப்பட்டிருந்தன.

மீட்கப்பட்ட சடலங்கள் அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பார்வையிடுவதற்காக மன்னாரில் இருந்து சென்றவர்களையே பொலிஸார் தடுத்து திருப்பி அனுப்பினர்.

எனினும் இந்த விடயம் தொடர்பில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சிலர் தலையிட்டதன் அடிப்படையில் இன்று ஞாயிற்றுக்கிழமை சடலங்களைப் பார்வையிட மன்னார்வாசிகள் அனுமதிக்கப்படுவர் என்று பிந்திய தகவல்கள் தெரிவித்தன. (அ-2)






மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிலெய்ட் டெஸ்ட் ஆஸி. சிறப்பான பதிலடி




அடிலெய்ட்,ஜன. 27

அடிலெய்ட்டில் நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி சிறப்பான பதிலடி கொடுத்துவருகின்றது. தனது முதல் இன்னிங்ஸை ஆடிவரும் ஆஸ்திரேலிய அணி நேற்றைய மூன்றாவது நாள் ஆட்ட நேர இறுதியில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 322 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள இந்தியா 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றுகின்றது. முதல் மூன்று போட்டிகளின் முடிவில் ஆஸ்திரேலியா தொடரில் 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இந்நிலையில், 4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி அடிலெய்ட்டில் நடைபெற்றுவருகின்றது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 526 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆடிய ஆஸ்திரேலிய அணி 2ஆம் நாள் ஆட்டநேர முடிவின் போது விக்கெட் இழப்பின்றி 62 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று 3ஆம் நாள் ஆட்டம் நடைபெற்றது. ஆஸியின் ஆரம்ப வீரர்கள் அணியை விக்கெட் இழப்பின்றி 159 ஓட்டங்கள் வரை அழைத்துச் சென்றனர். அப்போது ஆரம்ப வீரரான பில் ஜக்கிஸ் 60 ஓட்டங்களுடன் கும்ளேயின் சுழலில் போல்ட் ஆனார். இது அவரது 5ஆவது டெஸ்ட் அரைச்சதமாகும்.

தொடர்ந்துவந்த பொண்டிங் சிறப்பாக ஒத்துழைக்க மற்றைய ஆரம்பவீரரான மத்தியூ ஹைடன் தனது 30ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்திசெய்து அசத்தினார். அவர் 103 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது இஷாந்த் சர்மாவின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். அடுத்துவந்த மைக்கல் ஹசே 22 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து பதானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

எனினும், 4ஆவது விக்கெட்டில் இணைந்த பொண்டிங், மைக்கல் கிளார்க் ஆகியோர் அணியின் மேலதிக விக்கெட் இழப்பை நேற்றுத் தவிர்த்தனர். இருவரும் பிரிக்கப்படாத இணைப்பாட்டத்தில் இதுவரை 81 ஓட்டங்களைச் சேர்த்திருக்கின்றனர்.

நேற்றைய 3ஆம் நாள் ஆட்டநேரம் முடிவடையும் போது ஆஸ்திரேலிய அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 322 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பொண்டிங் 79 ஓட்டங்களுடனும், மைக்கல் கிளார்க் 37 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இன்று போட்டியின் 4ஆம் நாள் ஆட்டம் நடைபெறும்.

## விலைவாசியைக் குறைக்கக்கோரி ஜே.பிவியினர் பதுளையில் ஆர்ப்பாட்டம்

பதுளை,ஜன. 27

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைவாசிகளை உடனடியாகக் குறைக்குமாறு கோரி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பதுளை பிரதான பஸ் நிலையத்துக்கு முன்னால் ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

சுமார் ஐந்நூறு பேருக்கு மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

'உணவுப் பொருள்களின் விலையை உடன் குறை', 'பொய் பயிலாவை உடன் நிறுத்து', 'வாழ்க்கைச் சுமையை உடன் குறை', 'கொடு கொடு நிவாரணம் கொடு', 'மககளின் பிரச்சினைகள் தலைமேல் அமைச்சர்களின் தொகையே பல மடங்கு', 'வீண் விரயம் உயருது, மேலும் மேலும் பொருள்களின் விலை உயர்ந்தால் மஹிந்த ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு அனுப்புவோம்' - இவ்வாறான கோஷங்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சமந்த வித்தியாரட்ண, மாகாண சபை உறுப் பினர்கள் பூமிநாதன், சுதத் பலகல்ல உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். பதுளைப் பொலிஸார் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டு இருக் கின்றனர். (சி)

## விலைவாசி உயர்வைக் கண்டித்து கொழும்பில் மக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜன. 26

நாட்டில் தற்போது நிலவி வரும் காஸ் விலை உயர்வு மற்றும் விலைவாசி உயர்வு ஆகியவற்றைக் கண்டித்து வெள்ளிக் கிழமை தேசிய வாழ்க்கை முன்னணியினர் கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி னர்.

பி.ப 3.30 மணியளவில் ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டத்தின் முதல் நிகழ்வாக நாட்டில் காஸ் விலை உயர்வை உணர்த் தும் ஆற்றுகை நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் விலைவாசி மற்றும் காஸ்விலை உயர்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமது எதிர்ப்புக் கோஷங்களை பலமாக எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தொழில் சங்கம் மற்றும் தேசிய வாழ்க்கை முன்னணியின் தலைவரான இந்திக்க எஸ். ஹெட்டியாராய்ச்சி உரையாற்றுகை யில் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் தற்போது காஸ்விலை மற்றும் விலைவாசி ஆகியன அதிகரித்திருக்கின்றன. இந்த விலையேற்றம் தொடர்பாக நாம் நுகர்வோர் மற்றும் கூட்டுறவு அமைச்சுக்கு தெரியப்படுத்தியிருந்தும், அவர்கள் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. நாங்கள் இந்த விலையேற்றம் தொடர்பில் அரசிற்கு எதிராக பிரசாரம் எதனையும் செய்யவில்லை. ஆனால், விலைகளைக் கூட்டி விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராகவே நாம் நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். அத்துடன் இந்த விலையேற்றம் தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை எனில் எமது போராட்டம் தொடரும் - என்றார். (சி)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

செல்வன்
**செபஸ்ரியன் அருள் ஜோதீஸ்வரன்**
(புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவன்)

மண்ணில்
15★09★1992

விண்ணில்
29★12★2007



கடந்த 29.12.2007 அன்று இறைவனடி சேர்ந்த செல்வன் செபஸ்ரியன் அருள்ஜோதீஸ்வரனின் இரங்கல் திருப்பலியில் பங்குகொண்ட உற்றார், உறவினர், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம். சிகிச்சையின்போது யாழ்., கொழும்பு வைத்தியசாலைகளில் பணிபுரிந்த அனைத்து வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்களுக்கும் மற்றும் இவரது உடலை கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவர உதவியளித்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம். இவரது சிகிச்சையின் போது பண உதவி புரிந்த வங்கி உத்தியோகத்தர்கள், பாடசாலை சமூகத்தினர், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்கும், அரிமாக்கழக உறுப்பினர்கள், அருட்தந்தையர்கள், பொதுஸ்தாபனங்களுக்கும் இன்னும் இவரின் இறந்த செய்தியினைக் கேட்டு வெளிநாடுகளிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் பண உதவி புரிந்து தொலைபேசி வாயிலாக ஆறுதல் மொழி கூறிய அனைவருக்கும் மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் சமர்ப்பித்தவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்கு கொண்டோருக்கும் நன்றி நவில்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவுத் திருப்பலி பத்தாவத்தை புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் நாளை (28.01.2008) காலை 9 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து அவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பத்தாவத்தை, இளவாலை.
தகவல்:
குடும்பத்தினர்.

### தவறிவிட்டது

ஆறுகால்மடத்திற்கும் யாழ்.நகரப் பகுதிக்குமிடையே இரண்டு Note book (குறிப்புப் புத்தகம்) நேற்றுத் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் 0212229278 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். *பத்மராஜ்.*

### விற்பனைக்கு

சன்டெல் தொலைபேசி,போன் பூத், கண்ணாடி சோக்கேஸ் என்பன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: -
சி.அருமைத்துரை,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
T.P. 0776914195, 021 4590807.

### வாழ்க்கைத் துணைவி தேவை

யாழ். இந்து கௌரவ, சிறந்த குடும்பப் பின்னணி கொண்ட, 48 வயது, விவாகரத்துப் பெற்றவருக்கு (பிள்ளைகள் இல்லை) விவாகரத்துப் பெற்ற அல்லது தாரமிழந்த அல்லது தகுந்த பெண் தேவை. மணமகனிற்கு யாழ். நகருக்கு அண்மையில் சொந்த வீடும், சொந்தத் தொழிலும் உண்டு. பெண்ணின் குறிப்புடன் ஏனைய விவரங்களையும் குறிப்பிட்டு உடன் பின்வருமாறு தொடர்பு கொள்ளவும்.
மே/பா உதயன் யாழ்ப்பாணம்.

Special Offer
Mother Boards (LGA 478 DDR I & II)
intel Processor
Hard Disks ( IDE and Sata)
DDR1, DDR2, Ram
Optical Disc Drive
Combo,DVD -RW
Monitors - CRT 17", 15", LCD
Flash (1,2,4 GB)
Printer, UPS, Scanner
hp Toner (No 1)
Printer Ribbon, Cartridges
(இலங்கையில் hp முகவரினால் அங்கீகரிக்கப்பட்டது)
Intel pentium4 3.0Ghz/2m, Asus Motherboard, 512 DDR 2, 80GbHard Disk, Combo Drive, ATX Case with SMPS, 17" CRT Monitor, Keyboard & Optical Mouse.
Free PC TV Capture
MP 3 PLAYER
All types of Computer Repairs
சகல விதமான கணனி உதிரிப்பாகங்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
Warranty 1 & 3 Years With Service
திருமுருகன் கொம் நெற்

### பராமரிப்பாளர் தேவை

எமது ஆலயத்திற்கு முழுநேரப் பராமரிப்பாளர் தேவை. சம்பளம் நேரில்பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- நிர்வாகம்,
பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
திருநெல்வேலி.

### மரண அறிவித்தல்கள்

#### சீவரத்தினம் அனுசன் (கண்ணன்)

(ஆண்டு-11 மாணவன், யா/மல்லாகம் மகா வித்தியாலயம்)



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சீவரத்தினம் அனுசன் நேற்று (26.01.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சீவரத்தினம் - சாரதாதேவி தம்பதியரின் அன்பு மகனும் சியர்சா (யா/யூனியன் கல்லூரி, உயர்தரம் வர்த்தகப் பிரிவு), பகிர்வதன் (யா/மல்லாகம் மகாவித்தியாலயம்), சியாளா (இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமாரசாமி (வெள்ளைத்தம்பி), பொன்மணி, சின்னத்துரை (அமரர்) - சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆனந்த வடிவேல் - ஜெயக்குமாரி (ஜேர்மனி), நித்தியானந்தம் - சாந்தி (ஜேர்மனி), கருணாலிங்கம் - அமுதினி (கனடா), பத்மநாதன் - இந்திராதேவி (ஆவரங்கால்), சரோஜினிதேவி - சற்குணராஜா (தொட்டிலடி), சிவனேஸ்வரி - விக்கினேஸ்வரன் (சுழிபுரம்) ஆகியோரின் அன்பு மருமகனும் ராதாதேவி - ஜெயமோகன (ஜேர்மனி), கனகரத்தினம் - மாதவநாயகி (கொக்குவில்) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.01.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*
தகவல்
குடும்பத்தினர்.

#### முருகேசு மார்க்கண்டு

தனங்களப்பு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் தற்போது சித்தியார்வளவு, கந்தரோடையில் வசித்துவருவருமாகிய முருகேசு மார்கண்டு நேற்று(26.01.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - தங்கமுத்துவின் இளைய மகனும் அமரர் பதுமநாயகத்தின் அன்புக் கணவரும் அமரர் சீவரத்தினத்தின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி: *மறவன்புலோ, சாவகச்சேரி.*
தற்கலிக முகவரி: *சித்தியார் வளவு, கந்தரோடை, சுன்னாகம்.*
தகவல்: ரு.சரவணபவன்.

#### முருகேசு சபாரத்தினம்

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சபாரத்தினம் நேற்று(26.01.2008) சனிக்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் கமலாதேவி, திலகாம்பிகை ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் தம்பியும் பரஞ்சோதி, அன்னலட்சுமி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கங்காதரன், பரமேஸ்வரன், பவானிஸ்வரன், ரதீஸ்வரி ஆகியோரின் தந்தையும் சுபாசினியின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2008) ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*460, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.*
தகவல்:
மு.பரஞ்சோதி
(தம்பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரச் சிக்கலால் பொது மக்கள் எதிர்ப்பு
# உடன்பாடு கைவிடப்பட்டதால் சர்வதேச அதிருப்தி

கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதி மற்றும் 22ஆம் திகதிகளில் அன்றைய ஐ.தே. கட்சி அரசுக்கும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இடையில் போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்தானது. 2008ஆம் ஆண்டு ஜனவரி 02ஆம் திகதியன்று மேற்படி போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து மஹிந்தராஜ பக்ஷ அரச உத்தியோகபூர்வமாக விலகிக் கொள்வதாக முன்னறிவிப்பை விடுத்து, அவரது மஹிந்த சிந்தனையை அடியொற்றிச் செயற்படும் அரசியல் நடைமுறைக்கு அமைய நோக்கும் போது, மஹிந்த அரசு ஒருதலைப் பட்சமாக போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து உத்தியோக பூர்வமாக நீங்கிக் கொள்ள மேற்கொண்ட தீர்மானம் புதுமையானதல்ல- ஆச்சரியப்படத்தக்கதும் அல்ல. அது, பழைய வாக் குறுதியொன்று வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட கதையேயாகும். அதாவது, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புக் கிட்டிய ஆரம்ப நாட்களிலேயே, போர்நிறுத்த உடன்பாடு முற்றுமுழுதாக நீக்கப்படும் அல்லது மீளாய்வுக்கு உள்ளாக்கப்படும் என்ற வாக்குறுதி தமக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்திருந்த ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய அமைப்புக்களுக்கு ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவால் அந்த வேளையில் வழங்கப்பட்டிருந்தது.

எனவே, அது இன்று செயல்வடிவாக நிறைவேற்றப்பட்டமை புதுமையானதோ ஆச்சரியமானதோ அல்ல. அந்த வகையில், மஹிந்தராஜ பக்ஷவின் அன்றைய ஜனாதிபதித் தேர்தலோடு சம்பந்தப்பட்ட செயற்பாடுகளின் முக்கியமான வாக்குறுதி அம்சம். போர்நிறுத்த உடன்பாட்டை முற்றாக நீக்கி அதாவது அதிலிருந்து விலகிக் கொண்டு விடுதலைப் புலிகள் அமைப்பை நிராயுதபாணிகளாக்கும்- யுத்தத்தை மீண்டும் முன்னெடுத்துச்செல்லும்வாய்ப்பு உருவாக்கப்படுவதாகும். அன்று இந்த யோசனையை முன்வைத்தவர்கள், சுதந்திரக்கட்சியின் யுத்த விரும்பிகளான தரப்பு, ஜே.வி.பி. மற்றும்ஜாதிக ஹெல உறுமய அமைப்பு ஆகிய தரப்புக்களே ஆகும். அந்த வகையில், மஹிந்த சிந்தனையின் உண்மையான உரிமைக்காரர்களும் அவர்களேயாகின்றனர். அவர்களது அந்த யோசனை நிறைவேற்றப்பட்டு தற்போது மஹிந்தசிந்தனைநடைமுறைக்குவந்துள்ளது.

போர் நிறுத்த உடன்பாடு தூக்கியெறியப்பட்டுள்ளதன் மூலம் 2008ஆம் ஆண்டில் இந்த அரசின் பயண மார்க்கம் தொடர்பாக வெளிப்படுத்தப்படும் இலட்சணங்கள் கீழ்க்கண்டவாறு அமைகின்றன.

1. 2008ஆம் ஆண்டில் இலங்கை அரசின் ஒரே கோட்பாடு யுத்தம் மட்டுமே ஆகும். தற்போது யுத்தத்தை அறிமுகப்படுத்துவதற்கு மனிதாபிமான ரீதியிலான நடவடிக்கையென்ற முகமூடி அரசுக்கு அவசியமற்றதொன்றாகிறது. தாம் போர்நிறுத்த உடன்பாட்டை மீறிச் செயற்படவில்லையென்பதை வெளியுலகத்துக்குச் சுட்டிக் காட்டுவதற்கே இதற்கு முன்னர் அரசுக்கு மனிதாபிமான நடவடிக்கையென்ற அந்த முகமூடியை அணிந்து கொள்ளும் அவசியம் ஏற்பட்டிருந்தது. அரசு, போர்நிறுத்த உடன்பாட்டைத் தூக்கியெறிந்துள்ள இன்றைய நிலையில் -அதாவது தற்போது, யுத்தத்தைப் பாரியளவில் முன்னெடுத்துச் செல்வதற்குத் தடையாக இருக்கும் அனைத்துச்சவால்களையும் நல்ல விதமாகவோ அல்லது அடாவடித்தனமாகவோ நீக்கி விடுவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடும். அதற்கமைய ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரனின் படுகொலையை அந்த நடைமுறையின் ஆரம்பச் சமிக்ஞையாகக் கொள்ளமுடியும். வெட்கம், மானம், சூடு, சுரணையன்றி மேல்வின் சில்வாவைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள அக்கறை காட்டிச் செயற்படும் இந்த அரசின் போக்கிலிருந்து, நல்லாட்சி மற்றும் நடுநிலை நியாய தர்மம் கடைப் பிடிப்பதற்குப் பதிலாக, அரசியல் வன்முறையே இந்த அரசின் அரசியல்மொழி என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

2. 2008இன் இந்த யுத்தத்தில் முதலில் இரையாக்கப்படுவது உண்மையேயாகும். இவ்விதம் 'உண்மை' வெளிப்படாது போவதால் நேரடிப் பாதிப்புக்கு உள்ளாக நேர்பவை இந்நாட்டில் தைரியமாகச் செயற்பட்டுவரும் சில பொதுசன ஊடகங்களேயாகும். இலங்கையின் இராணுவத்தளபதி பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ள கருத்து வெளிப் பாட்டுக்கு அமைய, அரசுக்குப்பணிந்து அரசுடன் ஒத்துப்போகாத அனைத்து பொதுசன ஊடகங் களும் யுத்தத்தின் இலக்காகிவிடக்கூடும். யுத் தத்தின் வீரத்தனத்தைப் பெருமெடுப்பில் போற்றிப் புகழும் முக்கியத்துவம் பெரும்பாலான பொதுசன ஊடகங்களால் கைக்கொள்ளப்படுவது, மற்றும் பயமுறுத்தல்கள் ஆகிய இருவகைச் செயற்பாடுகள் காரணமாக யுத்தத்தின் பக்கவிளைவு உருவாக்கிவிடும் மனிதஉரிமை மீறல்கள் பகிரங்கப் படுத்தும் எதுநிலை மெதுமெதுவாகக் குறைவடைந்து போகலாம்.



சிங்களத்தில்: சுனந்த தேசப்பிரிய

3. போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து அரசு விலகிக் கொள்வதை அடுத்து, இலங்கையில் ஓரளவுக்காவது செயற்பட்டு வந்த சர்வதேச ரீதியிலான மனித உரிமைகள் தொடர்பான கட்டமைப்பு அற்றுப் போக நேரலாம். கடந்த காலகட்டம் முழுவதிலும் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் மூலம், யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்புக்களாலும் மேற்கொள்ளப்படும் மனித உரிமைமீறல்களுக்குஅவையே பொறுப்பேற்க வேண்டியுள்ளது என சுட்டிக் காட்டப்பட்டது. அந்த வகையில், விடுதலைப்புலிகள் அமைப்பைப் போன்றே குறிப்பாக கருணா தரப்பால் சிறார்கள் படையணிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதைச் சுட்டிக் காட்டியிருந்ததும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவேயாகும். அந்த அறிக்கைகள் சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தையும் பெற்றிருந்தன. இன்றைய நிலையில் அத்தகைய கண்காணிப்புக்களும் அற்றுப்போக நேரலாம். இதனிடையே, இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான ஆணைக்குழு என்பது முற்றுமுழுதாக அரசியல் சார்பு பதவி நியமனங்களைக் கொண்டதே என்பதும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டதொரு உண்மையாகியுள்ளது.

4. இலங்கை அரசின் அரசியல் பயணத்தின் போக்கு, மென்மேலும் கடும் போக்கு இன வாதக் கருத்தின் ஊடாகவே தீர்மானிக்கப் படும் என்பது இந்த நடைமுறைகள் மூலம் மீண்டுமொரு தடவை தெளிவு படுத்தப் பட்டுள்ளது. அந்த இனவாதக் கருத்தில் பின்னிப் பிணைந்திருக்கும் முக்கியத்துவம் பெறும் விடயங்களாவன, யுத்தவாதம் மற்றும் ஒற்றையாட்சிக் கட்டமைப்பு பாதுகாக்கப்படுவதே ஆகும். போர்நிறுத்தஉடன்பாடுநீக்கிக்கொள்ளப்பட்டதன் காரணமாகப் பெரும்புகழை ஈட்டிக் கொண்டுள்ள ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய இவ்விரண்டு தரப்புக்களும் தமது இனவாதக் கருத்துக்களுக்குள் அரசை மென்மேலும் அமிழ்த்திவிடக்கூடும். உண்மையான அதிகாரப் பரவலாக்கல் வழங்கப்படுவதற்கான அரசியல் வாய்ப்பு இதன் மூலம் நலிவடைந்து போக நேரலாம். அரசோடு ஒட்டிக் கொண்டிருக்கும் பழைய இடது சாரிக் கட்சிகள் அரசுக்கு எந்தவொரு அழுத்தத்தையும் விடுக்க இயலாத வெறும் விளம்பரப் பலகைகளாக மட்டுமே கணிக்கப்படக்கூடும். அதே போன்று இந்நாட்டில் செயற்படும் சிறுபான்மை அரசியல் கட்சிகள் அரசின் மத்தியில், அரசியல் ரீதியில் தனிமைப்படுத்தப்படுவதும் நடந்தேறலாம். இந்த யுத்தத்தின் பெறுபேறொன்றாக -தமிழ் மக்கள் முகம்கொடுத்துவரும் அவலங்களுக்கு மத்தியில்-தொடர்ந்தும் அரசில் தங்கியிருப்ப தென்பது அக்கட்சிகளைப் பொறுத்த வரையில் சிரமம் மிக்கதொரு கருமமாகி விடவும் கூடும்.

5.இத்தகைய நிலைப்பாட்டின் மத்தியில், அரசு தனது ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்துக் கொள்வதென்பதும் பெரும் சவாலொன்றாகவே அமையும்.

ஏனெனில் அரசின் இந்த தீவிரயுத்த முன்னெடுப்பு நிலைப்பாடு காரணமாக அரசு தரப்பில் இணைந்திருக்கும் சிறுபான்மை அரசியல்கட்சிகள் மீது அரசிலிருந்து விலகுமாறு கோரும் நெருக்குதல்கள் அதிகரிப்பதே அதற்குக் காரணமாகும். (முற்று முழுதாக ஆயுத மேந்தாத தமிழ்க்கட்சிகள் தம்மை அரசுடன் தக்க வைத்துக்கொள்வதற்காக தொடர்ந்தும் அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கக்கூடும்) இந் நிலையில், ஜே.வி.பி. தரப்பை முழுமையாகவோ அல்லது அதன் செல்வாக்கு மிக்க ஒரு தரப்பினரைத் தம் பக்கம் வளைத்துக் கொள்ள இயலாது போகுமானால், அரசு ஸ்திரமிழந்து போவதைத் தடுத்து நிறுத்த இயலாது. எனவே, ஜே.வி.பி. தரப்பினர் மத்தியில் செயற்படும் கடும்போக்கு இனவாதத் தரப்பை அல்லது அத் தரப்பின் ஊடாக ஒட்டுமொத்த ஜே.வி.பி. தரப்பையும் தம்பக்கம் வளைத்துக் கொள்வதற்கு அவசியம் எனக்கருதும் மேலும் பல நடவடிக்கைகளை அரச மேற்கொள்ளக்கூடும் என்பதற் குக் கட்டியம் கூறும் செயற்பாடொன்றாகவும் அரசின் இந்த போர்நிறுத்த உடன்பாட்டு விலகலைக் கருத முடியும்.

6. முற்றுமுழுதான யுத்தச் செலவினம் என்ற- யுத்தப் பொருளாதார நடைமுறை உருவாக்கி வரும் நாட்டின் பொருளாதாரச் சிரமங் களின் மத்தியில், உக்கிரம் பெற்றுவரும் நாட்டு மக்களின் துன்பங்களும் அவலங்களும் அரசியல் எதிர்ப்பலையாக கொதித்தெழுவதற்கும் இடமுள்ளது.அதைத் தடுத்து நிறுத்தும் முதன்மை நடவடிக்கையாக எதிர்க் கட்சியை பிளவுபடுத்தி துண்டங்களாக்குவது மற்றும் அரசியல் எதிராளிகள் மீது தேசத்துரோகிகள் என்ற முத்திரை குத்தப்படும் செயற்பாடுகளும் அரங்கேறலாம். அவை நிறைவேற்றப்படுவதன் மூலம், ஜே.வி.பி.யின் தொழிற்சங்கங்களை அவற்றின் போராட்ட மார்க்கத்திலிருந்து அப்பால் செல்ல வைப்பது, மிக இலகுவாகி விடும். அதேவேளை, ''வயிற்றை இறுகக் கட்டிக்கொள்ளுங்கள்'' என்ற லால் காந்தாவின் தாரக மந்திரத்தை மீண்டும் நாட்டு மக்களுக்கு நினைவ படுத்தும் தேவையும் அரசுக்கு அவசியமானதொன்றாகும். அத்தோடு, போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிக் கொண்டு-அதை நீக்கியமை, பயங்கரவாதத்துக்கு எதிரான அரசின் தீர மிக்க செயலேனப் பாராட்டும் எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தம்பக்கம் வளைத்துப் போடுவதற்கும் கூட போர்நிறுத்த உடன்பாடு நீக்கிக் கொள்ளப்பட்டமை பயன்படக்கூடும்.

7. இவை இவ்வாறிருக்க, போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிக் கொள்வதால், சர்வதேச ரீதியில் அவசியமற்ற விதத்தில் இந்த நாடு அபகீர்த்திக்குள்ளாகி - இலங்கை மீது கரும்புள்ளி அடையாளம் குத்தப்படும் நிலை உருவாக இடமுள்ளதாக ஒருமாத காலத்துக்கு முன்னர் இந்த அரசு கருத்து வெளியிட்டிருந்தது. ஆனால், தற்போது அக் கருத்து வெளிப்பாடு தூக்கி வீசப்படும் அளவுக்கு அரசின் மத்தியில் யுத்தவாதம் வலுப்பெற்றுள்ளது. தற்போது அவதானித்தமைக்கு அமைய சர்வதேச ரீதியில் இலங்கை எள்ளி நகையாடப்படும் வாய்ப்பு வெகுவாக அதிகரிக்கும் என்பதுடன், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் கவனத்தில் கொள்ளப்படாத ஈராக் மற்றும் சீனா போன்ற முதலாளித்துவ நாடுகளை நோக்கி இலங்கை மென்மேலும் நெருங்கிச் செல்லவும் கூடும்.

8. இவை எவ்வாறான போதிலும், சிங்கள மக்கள் மத்தியில், குறிப்பாக, கிராமப்புற சிங்கள மக்கள் மத்தியில் யுத்தவாதம் வலுப்பெற்றுள்ளது என்பதில் எவ்வித வாதத்துக்கும் இடமில்லை. ✱

தமிழில்: சரா

# வடக்கின் ஆளுநர் தமது அதிகாரங்களைச் செயற்படுத்த
# இடைக்கால சபை ஆலோசனைகளும் உதவியும் வழங்கும்

**அனைத்துக் கட்சிக் குழுவினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் 23.01.2008 ஆம் நாளன்று கையளிக்கப்பட்ட இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இடைக்கால அறிக்கையின் முழு விவரங்களும் இங்கே தரப்படுகிறது.**

1. அறிமுகம்

1.1. தேசியப் பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படையாக அமையக்கூடிய ஒரு தொகுதி யோசனைகளைத் தயாரிக்குமாறு ஜனாதிபதியினால் சர்வகட்சி மகாநாட்டுப் பிரதி நிதித்துவக் குழுவுக்கு ஆணை வழங்கப்பட்டது. இக்குழு ஒன்றரை வருடகாலமாக 63 அமர்வுகளை நடத்திய பிறகு கருத்தொரு மிப்பு ஆவணம் பூர்த்திசெய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. மிகவும் அண்மைய எதிர் காலத்தில் அந்த ஆவணம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படக்கூடியதாக இருக்க வேண்டும். அதன் பெறுபேறு பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு அடிப்படையானதாக அமையும். அதை நடைமுறைப்படுத்துவதற்கு தற்போதைய அரசியலமைப்புக்கு திருத்தங்களைக் கொண்டு வரவேண்டியிருக்கும். சில பிரிவுகளைப் பொறுத்தவரை சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலமாக மக்களின் அங்கீகாரத்தைப் பெறவேண்டியிருக்கும். இவற்றைச் செய்வதற்கான உகந்த சூழ்நிலை உருவாக்கப்படுவதற்கு கணிசமான காலம் தேவை.

1.2. இத்தகையதொரு சூழ்நிலையில் சர்வகட்சி மகாநாட்டு பிரதிநிதித்துவக் குழு அதன் சொந்த முன்மொழிவுகளை கருத்தில் எடுத்து, குறுகியகால இடைவெளியில் மாகாணங்களுக்கு கூடுதல் பட்சமானதும் பயனுறுதியுடையதுமான அதிகாரப்பரவலாக்கலைச் செய்வதற்கான செயற்திட்டமொன்றை இனங் கண்டிருக்கிறது. இதன் நோக்கம் தமிழ் பேசும் மக்களின் குறிப்பாக, வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்றவர்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்வதேயாகும். தற்போதைய அரசியலமைப்பு (1978 அரசியலமைப்பு) வரையறைக்குள் இந்தச் செயற்திட்டம் அமையும். சர்வகட்சி மகாநாட்டு பிரதிநிதித்துவக் குழுவினால முன்மொழியப்படுகின்ற இச்செயற்திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கும். அத்துடன், வடக்கிலும் கிழக்கிலும் ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்படும் மாகாண சபைகள் அமைக்கப்படும் வரை இடைக்கால ஏற்பாடொன்றையும் இத்திட்டம் விதந் துரைக்கிறது.

1.3. 1987 ஜூலையில் இந்திய- இலங்கை சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் 1978 அரசியலமைப்புக்கு 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. அத்திருத்தத்தின் விளைவாக இலங்கை பூராவும் மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கம் செய்யப்பட்டது. பரவலாக்கப்பட்ட அதிகாரங்கள் இரு பட்டியல்களின கீழ் அதாவது மாகாணங்களுக்கான பட்டியல், பொதுப்பட்டியல்- குறித்துரைக்கப்பட்டன. ஏனைய சகல அதிகாரங்களும் ஓர் ஒதுக்கீட்டு பட்டியலின் ஊடாக மத்திய அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்டன. இந்த மூன்று பட்டியல்களிலும் உள்ளடக்கப்படாத எந்தவொரு விடயதானமும் அல்லது செயற்பாடும் ஒதுக்கீட்டுப் பட்டியலின் கீழ் வருபவையாகவே கருதப்படும்.

1.4. பொதுப்பட்டியலின் ஊடாக மாகாணங்களுக்குப் பரவலாக்கம் செய்யப்பட்ட விடயதானங்களும் செயற்பாடுகளும் எந்த வகையிலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஒதுக்கீட்டுப் பட்டியலுக்கு சொந்தமானவையாகவே இந்த விடயதானங்களும் செயற்பாடுகளும் கருதப்பட்டு அவற்றை மத்திய அரசாங்கமே அதன் கைகளில் வைத்திருந்தது.

2. அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு கூடுதல் பட்ச அதிகாரப் பரவலாக்கலை அனுமதிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள்.

2.1. சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நிர்வாக அதிகாரங்களைப் பொறுத்தவரை தற்போது இருக்கக்கூடிய குறைபாடுகளை இல்லாமல் செய்து அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

2.2. மாகாணசபைகள் பயனுறுதியுடைய முறையில் செயற்படுவதற்கு வசதியாக போதுமான நிதி அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டும்.

2.2.1. மாகாணங்களின் [illegible] குள் வருகின்ற எந்தவொரு விடயதானத்தைப பொறுத்தவரையிலும் மத்திய அரசாங்கத்தினால் மாகாணங்களில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்களுக்கான சகல நிதிகளும அந்தந்த மாகாண நிருவாகங்களின் ஊடாகவே மத்திய அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேண்டும்.

3. அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு கூடுதல் பட்ச அதிகாரங்கள் பரவலாக்கம் செய்யப்படுவதை அனுமதிப்பதற்கு தேவையான விசேடஏற்பாடுகள்.

3.1. கிழக்கு மாகாணத்தில் மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதற்கான உகந்த சூழ்நிலை இருப்பதாகவும் அந்தத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்றும் சர்வகட்சி மகாநாட்டுப் பிரதிநிதித்து வக்குழு கருதுகிறது.

3.2. வடமாகாணத்தின் நிலைமை அமைதியானதாக இல்லை. வடக்கில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதென்பது அண்மைய எதிர்காலத்தில் சாத்தியமாகப் போவதில்லை. அதனால், அதிகாரப் பரவலாக்கத்தின் பயன்களை வடமாகாணத்தின் மக்களும் அனுபவிப்பதற்கு வகை செய்ய மாற்று ஏற்பாடு ஒன்று அவசியமாகிறது.

3.3. வடக்கில் தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை என்பதால், அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் வடமாகாணத்தில் இடைக்காலச் சபையொன்றை நிறுவுவதற்கான உகந்த உத்தரவை ஜனாதிபதியால் பிறப்பிக்க முடியும். அத்தகைய இடைககால சபை சட்டங்களை இயற்ற வேண்டிய அவசியமும் இருக்கலாம்.

3.4. ஆளுநர் அவருக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை செயற்படுத்தும் விடயத்தில் மாகாணமொன்றின் இடைக்காலச் சபை அவருக்கு உதவியும் ஆலோசனையும் செய்யும். மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படும் வரை இடைக்கால சபை செயற்படும்.

3.4.1 இடைக்கால சபை அந்த மாகாணத்தின் இனத்துவ குணாம்சத்தை பிரதி பலிப்பதாக இருக்கவேண்டும்.

3.4.2. எனவே, அரசியல் அனுபவமும் மாகாணத்தின் [illegible] மக்களினதும் அபிவிருத்தியின் [illegible] கூடிய அக்கறையும் கொண்ட மாகாண மக்களினால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நபர்களை உள்ளடக் கியதாக இடைக்காலசபை இருக்கவேண்டும் என்று முன்மொழியப்படுகிறது.

4.அரசியலமைப்பின் அரசகருமமொழிகள் ஏற்பாடுகளின் அமுலாக்கம்.

4.1 மொழிகள் தொடர்பிலான அரசியலமைப்பின் 4 ஆவது அத்தியாயத்தை முழு மையாக நடைமுறைப்படுத்துவதற்கான சட்டங்களை பாராளுமன்றம் நிறைவேற்றுவதை உறுதிசெய்யும் உடனடி நடவக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

4.2. சட்டவாக்க குணாம்சத்திலும் பார்க்க நிருவாக ரீதியான தன்மைகளை எடுக்கக் கூடிய பரிகாரநடவடிக்கைகளை எடுப்பதற்கான பல கட்டங்கள் இருக்கின்றன. பின்வரும் நடவடிக்கைகளை அரசாங்கம் அக்கறையுடன் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

(அ) வடக்கிலும் கிழக்கிலும் மாத்திரமல்ல. நாடு பூராவும் தமிழ் பேசும் மக்கள் பொலிஸ் நிலையங்களில் தங்கள் சொந்த மொழிகளில் தொடர்பாடல்களைச் செய்து அலுவல்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு வசதியாக போதுமான எண்ணிக்கையில் தமிழ்ப் பொலிஸ் அதிகாரிகளை ஆட்திரட்டல செய்ய வேண்டும்


(ஆ) பொதுமக்கள் தங்களது சொந்த மொழிகளில் அமைச்சுகள், அரசாங்க திணைகளங்கள், சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் அலுவல்களைச் செய்து கொள்வதற்கு வசதியாக ஊழியர்களை நியமித்தல் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் உட்பட சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்

(இ) மக்களைத் தேடிச் சென்று அதே இடத்தில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வசதியாக தமிழ் மொழியில் தாராள பரிச்சயமுள்ள அதிகாரிகளைக் கொண்ட நகரும் அலுவலகங்களை கிரமமாக நடத்துவ தற்கான ஒழுங்கமைப்புகள் செய்யப்பட வேண்டும்

(4) மேற்கூறப்பட்டவாறு தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்குகின்றவற்றையொத்த பிரச்சினைகளை வடக்கிலும் கிழக்கிலும் வாழும சிங்களச் சிறுபான்மையினர் எதிர் நோக்குகிறார்கள். அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம் நிறைந்த வாழ்த்துகள்



05.01.2008 இல் மணிவிழாக் கண்ட நாயகனும் வடபிராந்திய மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராகவும் வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் கல்விப் பணிபுரிந்தவருமான

உயர்திரு.
**வே.தி.செல்வரத்தினம்**

அவர்கள் மனமகிழ்வுடனும் உடல் நலத்துடனும் மேன்மேலும் கல்விப்பணி புரிந்து சிறப்புகள் பல பெறும் வண்ணம் மனம் நிறைய வாழ்த்துகிறோம்.

**அதிபர், ஆசிரியர்கள்**
**யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.**

## கண்ணீர் அஞ்சலி

*24.01.2008 அன்று எமது நண்பன்*

**செல்வன் V.நில்சன்** *அவர்களின் பேரனார்*

**ஆறுமுகம் வேலாயுதபிள்ளை**

(ஓய்வுபெற்ற கைதடி முதியோர் இல்ல ஊழியர்)

*சிவபதம் அடைந்த செய்தி அறிந்து துயரடைவதுடன் அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இருபாலை. (70499) **கல்வி கற்கும் நண்பர்கள்.**

## மரண அறிவித்தல்

### செல்வரத்தினம் மகேந்திரன்

அரியாலை சின்னக்கிணற்றடி ஒழுங்கையை பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் மகேந்திரன் 25.01.2008 அன்று லண்டனில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் மகேஸ்வரியின் அன்பு மகனும் மோகனரஞ்சிதன் (S.M.றஞ்சன்), சற்குணவதி, நித்தியானந்தன், சோதிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வராணி காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*சின்னக்கிணற்றடி ஒழுங்கை,* **குடும்பத்தினர்.**
*அரியாலை.* (70500)

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானேஸ்வரி சிதம்பரநாதன்



இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி சிதம்பரநாதன் 25.01.2008 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை சிதம்பரநாதன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சொர்ணகாந்தி, சிவகுமார் (கொலண்ட்), விஜயகுமார் (வர்த்தகர்), விமலகாந்தி (சுவிஸ்), சுபாஜினி (ஆசிரியை - சுதுமலை வடக்கு தமிழ் கலவன் வித்தியாலயம் ) ஆகியோரின் அன்புத் தாயும் இந்திரலிங்கம் (உதவிப் பிராந்திய கணக்காளர் வ.பி.போ.ச, கோண்டாவில்), வக்சலா (கொலன்ட்), சந்திரசேகரன் (சுவிஸ்), உதயகுமார் (முகாமைத்துவ உதவியாளர், கூட்டுறவு அபிவிருத்த உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும்,சிந்துஜன், சியாந்தன் (மாணவர்கள், கொக்குவில் இந்துக் கல்லூரி), விநித்தா(சுவிஸ்), தனஷன் (சுவிஸ்), அபிஷேக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்க முகாமையாளர்) றோசம்மா மற்றும் கதிர்காமநாதன் (இளைப்பாறிய கிளை முகாமையாளர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன் (சட்டத்தரணியும் பதில் நீதிபதியும் கொழும்பு), நவரத்தினம் (இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் மற்றும் தேசியசேமிப்பு வங்கி பொது முகாமையாளர்), இரத்தினம் மற்றும் மகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை, கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.01.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**சி.விஜயகுமார்** *(மகன்)*,
**இ.இந்திரலிங்கம்** *(மருமகன்)*,
**ப.உதயகுமார்** *(மருமகன்).*

*மஞ்சத்தடி முருகன் கோயில் வீதி,*
*இணுவில்.*

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம்.

**சிவகுமாரன் பாம்**
கல்வியங்காட்டுச் சந்தி. (70468)

## வாடகைக்கு

வட்டுக்கோட்டையில் கடை ஒன்று வாடகைக்கு கொடுப்படும்.
தொடர்பு:- க. சுந்தரமூர்த்தி,
*சங்கரத்தைச் சந்தி, பிரதான வீதி,*
*வட்டுக்கோட்டை* (70495)

## விற்பனைக்கு

ரெலிபோன்பூத் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-T.P: *0212223772*
*55, சீனியர் லேன்,*
*யாழ்ப்பாணம்.* (70488)

## ஒத்துமாறல்

கண்டி மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலை யில் "தமிழ் மொழியும் இலக்கியமும்" கற்பிக்கும் ஆசி ரியர் ஒருவர் யாழ். மாவட்டத்தில் உள்ள பாட சாலை க்கு ஒத்துமாற விரும்புகிறார்.
*தொடர்பு:-0779785759*
**குணராஜா தர்சினி,**
*கேணியடி லேன், திருநெல்வேலி.* (70497)

## பிரத்தியேக ஆங்கில வகுப்புகள்

வெளிநாடு செல்ல இருப்போர், தொழில் புரிவோர், தொழில் தேடுவோர் மற்றும் G.C.E A/L, O/L அடங்கிய சகல மாணவர்களுக்கும் ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதுதல், அறிக்கைள் தயாரித்தல், உரையாடல், கட்டுரை எழுதுதல், இலக்கணம் போன்ற அனைத்தும் முன்னைநாள் கொழும்பு சர்வதேசக்கல்லூரி, ஆங்கில ஆசிரியரினால் யாழ். நகரில் வீடுகளுக்கு வந்து கற்றுக் கொடுக்கப் படும்.

**விஜயானந்தன்**
*65/23, மாட்டின் வீதி,யாழ்ப்பாணம்.*
*தொ.பே.இல.: 0777 110872* (70460)

## சிவாலயா திருமணசேவை

அமெரிக்காவில் குடியுரிமையுடைய சாவகச்சேரி இந்து கௌரவ குடும்பம், 1971 அனுசம், 1ஆம் பாதம், 8 இல் செவ்வாய், கிரக பாவம் 33 3/4 5'6" உயரம், Fair, B.E.Mcse Engineering எஞ்சினியராகப் பணிபுரியும் மணமகனுக்கு அழகான M.B.B.S. டாக்டர் மணப்பெண் தேவை. மேலும் **தென்இந்தியாவில் எமது சேவைகள்:** திருமணசேவை, விமான நிலைய வரவேற்பு டிராவல்ஸ், தங்குமிடவிடுதி, திருமண மண்டபம், ஐயர், ஏற்பாடு, கலைநிகழ்ச்சிகளுக்கான கலைஞர்கள், இசைக் குழுவினர்கள் ஏற்பாடு செய்து கொடுக்கின்றோம்.

**விபரங்களுக்கு:**
**ShivaalayaInternational**
Marriage Bureau, 389c Ramalingam Road,
Thirunelvely East, Jaffna, Srilanka.
T.P.:0775834982. 00919710332442 (தமிழ்நாடு) (70472)

## வதிரியில் இன்று லயன்ஸ் கழக முழுநாள் நிகழ்வு

**யாழ்ப்பாணம்,ஜன.27**

யாழ்.லயன்ஸ் கழகம் வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் வருடாந்தம் நடத்திவரும் முழு நாள் நிகழ்ச்சித்திட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சென். ஜோன்ஸ், சுண்டுக்குழி, யாழ். இந்து மகளிர் கல்லூரிகளைச் சேர்ந்த லியோ கழக மாணவர்களும், சொன்ட் நிறுவன அங்கத்தவர்களும் கலை நிகழ்வுகளை நடத்துவர்.

ஆச்சிரமத்தில் உள்ளவர்களுக்கு லயன்ஸ் கழகத்தின் சார்பில் மதிய உணவும் வழங்கப்படும். (202)

## மரண அறிவித்தல்

### அம்பலம் கந்தையா



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் உடுவில் பெரிய மதவடியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலம் கந்தையா (ஓய்வு பெற்ற ஊழியர், புகையிரதத் திணைக்களம்) அவர்கள் நேற்று (26.01.2008) சனிக் கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அம்பலம் - லட்சுமிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ் சென்ற கந்தையா - காமாட்சிப்பிள்ளையின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொன்னுப்பிள் ளையின் சகோதரனும் தவமலர், மனோகரன் (தபால் ஊழியர் தெல்லிப்பழை), ஸ்ரீஸ்கந்தராஜா (சுவிஸ்), ஸ்ரீவதனி, ஸ்ரீ ரஞ்சன் (நெதர்லண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராஜா (பிளம்பர், மல்லாகம் தொழிற்சாலை), பவானி, தயாவதி (சுவிஸ்), மகாதேவன் (சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்), சசிரேகா (நெதர்லண்ட்) ஆகியோரின் அன்பு மாமனும் மயூரன் N.G.O (CACPD), பிரிதா (P.H.M. இணுவில்), சபிதா (யா/இராம நாதன் கல்லூரி 2009 A/L), ஜெகதீபன் அஞ்சலா, நிரோஷனா(யா/இராமநாதன் கல்லூரி 2008 A/L) சஜீஸ், சுகர்னியா (யூனியன் கல்லூரி), ஷர்மிலன், ரேனுஜன், சயூரன், துலக்ஷன் (யூனியன் கல்லூரி), அசோக், அபிராஜ், அட்சயா(சுவிஸ்), சாருஜா, சஜீவன் (நெதர்லண்ட்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (26.01.2008) சனிக் கிழமை பிறபகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
K.K.S. *றோட்,* மனோகரன் *(மகன்)*, மலர் *(மகள்)*,
*உடுவில் கிழக்கு,சுன்னாகம்.* (70555) வதனி *(மகள்).*

### வல்லிபுரம் தாமோதரம்பிள்ளை

**(இளைப்பாறிய புகையிரத கட்டுப்பாட்டு அதிகாரி)**



சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தாமோதரம் பிள்ளை 25.01.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா (மலாயன் பென்சனியர்) -திரவியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாஜனியின் அன்புக் கணவரும் பிரேமகுமாரி (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, கொழும்பு), காலஞ்சென்றவர்களான நந்தகுமாரி, சிவகுமாரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி தற்பரசுந்தரம் தையல்நாயகி , கந்தையா (திருக்கேதீஸ்வரம் கந்தையா -ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான கணேஸ் (ஆசிரியர்), பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (27.01.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் கொற்புலவு மயானத்தில்(அல்லாரை) தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*தாமோதரம்பிள்ளை வீதி,* தா.பிரேமகுமாரி
*சங்கத்தானை,* (மகள்).
*சாவகச்சேரி.* (70556)

## Forut வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்வியாண்டு 2008/2009

**யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டப்பாட நெறி**

* கலை முதற்தேர்வு (G.A.Q)

க.பொ.த.உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் 02.01.2008 இல் ஆரம்பமாகின்றன.

*விபரங்களுக்கு :* நிர்வாகத்தினர்,
Forut வெளிவாரிப்பட்டப் படிப்புகள்,
தம்பசிட்டி, பருத்தித்துறை. (சி/551242)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் அபிவிருத்திச் சங்கர் செயலாளரும், நலன் விரும்பியும், நிர்வாகசபை உறுப்பினருமாகிய

அமரர்
**சுப்பிரமணியம் நடேசபிள்ளை**
(சமாதான நீதிவான்)

அவர்கள் 24.01.2008 அன்று அகால மரணம் அடைந்துள்ளார். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

யா/குடமியன் அ.த.க.பாடசாலை,
வரணி.
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனடா பிரஜா உரிமையுடைய, 1981 இல் பிறந்த, பூசம் 2 ஆம் பாதம், கிரகபாகம் 28 ¾, செவ்வாய் 12 இல் உள்ள மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.
தொடர்பு: - T.P.:021 222 3772
(70489) 55, *சீனியர் லேன், யாழ்ப்பாணம்.*

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் புடைவை விற்பனை நிலையம் ஒன்றிற்குபெண் விற்பனையாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
(மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: விளம்பர இல. 3052
*மே/பா உதயன்* (சி/551227)

## விற்பனைக்கு

Doctor இன் தனிப்பாவனை (16500 km) Hero Honda Super Sptendor மோட்டார் சைக்கிளும், Electric தையல் மெசினும் (Victoria) விற்பனைக்கு உண்டு.
முகவரி: M.K.S. மெடிக்கல் கிளினிக்,
*பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*
பார்வையிடும் நேரம் : 4 - 7 மணி p.m.
T.P. 077 3736661 (70551)


## கடைகள் விற்பனைக்கு

வட்டுக்கோட்டையில் சகல வசதிகளுடன் 2 கடைகள் (தொடர்) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-க. சுந்தரமூர்த்தி,
சங்கரத்தைச் சந்தி,
பிரதான வீதி, வட்டுக்கோட்டை. (70494)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை மீண்டும் மக்கள் பணியில்...

மது பிரதேச மக்களின் நோயற்ற நல்வாழ்வுக்கும் சுக நலத்திற்கும் சிறந்த வைத்திய சேவைகளை நீண்ட காலமாக ஆற்றி வந்த மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை தற்போது மீண்டும் தனது சேவைகளை- நவீன மருத்துவ தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டுப் பல்வேறு செயற்பாடுகளை புதிய உத்வேகத்துடனும் அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வருகின்றது.



மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையின் முன்புறத் தோற்றம்

தென் கிழக்கு ஆசியாவில் முதல் முதலாக கூட்டுறவாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு வைத்தியசாலை என்ற வரலாற்றுப் பெருமையை பெற்றுள்ள இவ் வைத்தியசாலையானது 1935-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24-ஆம் திகதி (24.10.1935) ஆரம்பிக்கப்பட்டது. இங்கு பணிபுரிந்த வைத்திய அதிகாரிகளின் அர்ப்பணிப்பு மிக்க வைத்திய சேவைகளால் கவரப்பட்டு யாழ். மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் மக்கள் தமது வைத்திய சிகிச் சைக்காக இங்கு வர ஆரம்பித்தனர்.

கூட்டுறவு முறையில் ஒரு வைத்திய சாலையை எப்படிச் சிறப்பாக நடத்த முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக- முன் உதாரணமாக இவ் வைத்தியசாலை திகழ்ந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். வசதி குறைந்த நிலையிலுள்ள மக் கள் பலரும் குறைந்த கட்டணத்தில் இவ் வைத்தியசாலையின் சேவைகளைப் பெற்றுள்ளார்கள். தற்போதும் பெற்று வருகின்றார்கள்.

1990 ஆம் ஆண்டிலும் அதற்குப் பிறகும் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களால் மக்கள் பெரும் பாதிப் படைந்ததைப் போல இவ் வைத்திய சாலையிலும் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டன. இவ் வைத்தியசாலை விடுதி கட்டடங்களும் மருத்துவ உபகரணங்களும் மற்றும் தளபாடங்களும் பெரும் சேதத்திற்கு உள்ளாகின. அத்துடன் மக்கள் இடம் பெயர்ந்தமையாலும் பாதிப்புகள் ஏற்பட்டன.

### மீண்டும் பழைய நிலையில்

ஆயினும் மக்கள் 1996 இல் மீளக் குடியேறியதை அடுத்து இவ் வைத்தியசாலையைப் புனரமைப்பு செய்து வைத்திய சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வைத்தியசாலை பணிப்பாளர் சபையினரும் கூட்டுறவாளர்களும் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டனர். இதன் பயனாக வெளி நாடுகளிலுள்ள தமிழர் அமைப்புகள் மற்றும் உள் நாட்டிலுள்ள அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு உதவிகளைச் செய்ய முன்வந்தன. வடக்கு-கிழக்கு மாகாண அவசர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பிரதம செயலாளரின் அனுசரணையுடன் இவ் வைத்தியசாலைக்கு X-Ray இயந்திரம், பற்சிகிச்சை Dental X-Ray இயந்திரம், E.C.G. Monitoring System உட்பட பல்வேறு இயந்திர சாதனங்களும் வைத்திய உபகரணங்களும் இரு அம்புலன்ஸ் வண்டிகளும் கிடைத்துள்ளன.

### நீரிழிவு சிகிச்சைப் பிரிவு

இதேவேளை- இங்கிலாந்திலுள்ள இரட்ணம் நிறுவனத்தினரின் அனுசரணையுடன் நீரிழிவு (சலரோகம்) நோயாளர்களின் நலன்கருதி நீரிழிவு இலவச சிகிச்சைப் பிரிவு செயற்பட்டு வருகின்றது. நீரிழிவுக்கான வைத்திய சிகிச்சை, இரத்த, சலப் பரிசோதனைகள் இந்த சிகிச்சை நிலையத்தில் முற்றும் இலவசமாக (மருந்துகள் கூட) இலவசமாக வழங்கப்பட்டு வருவது குறிப்பிட வேண்டியதொன்றாகும். இப் பிரதேச நீரிழிவு நோயாளர்கள் பலரும் இச் சேவையால் பயனடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை-இங்கு முதியோர் பராமரிப்புச் சேவையும் நடைபெற்று வருகின்றது. பிரிட்டனில் உள்ள தமிழ் மருத்துவ நிறுவனத்தின் (Medical Institute of Tamil - UK) அனுசரணையுடன் கடந்த வாரம் முதல் குடும்ப வைத்தியத்துறை சிகிச்சை நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

இங்கு இருதய சிகிச்சை வைத்திய நிபுணர், கண் வைத்திய நிபுணர் உட்பட மற்றும் பல வைத்திய அதிகாரிகள் வருகை தந்து சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ் வைத்தியசாலையின் சேவைகளை இப் பிரதேச மக்கள் நன்கு பயன்படுத்திப் பயன்பெற வேண்டும். மக்கள் காட்டும் நல்லாதரவு இவ் வைத்தியசாலையின் சேவைகளை-பணிகளை எதிர்காலத்தில் மேலும் ஊக்குவிக்க முடியும் என்று கூட்டுறவு சேவையிலுள்ள இவ் வைத்திய சாலை நிர்வாகத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

'நீர்ப்' திட்டத்தின் மீது வடக்கு மாகாணப் பிரதம செயலாளரின் முயற்சியால் கிடைக்கப்பெற்ற பற்சிகிச்சைக்கான நவீன எக்ஸ் - ரே இயந்திரமும், உபகரணங்களும்



என்.எம்.கந்தசாமி

# வயதும், நோயும் ஓவியம் தீட்டுவதற்குத் தடையல்ல

கலாபூஷணம் 'சபா'வுடன் ஒரு நேர்காணல்.

**முதுமையிலும் இளமை சொட்டும் ஓவியங்களைத் தீட்டிக் கொண்டிருப்பவர் 'சபா' என்றழைக்கப்படும் ஓவியக் கலைஞர் கலாபூஷணம் சரவணமுத்து சபாநாயகம். வீரகேசரி, தினகரன் மற்றும் ஈழநாடு முதலிய தமிழ் ஏடுகளை ஒரு காலத்தில் அவரது ஓவியங்கள் அலங்கரித்ததுண்டு. முதுமையும் நோயும் அவரை முடக்கிவிடப் பார்த்தாலும் என்றும்போல துடிப்போடு ஓவியம் தீட்டிக் கொண்டிருக்கிறார் அவர். மரபுவழி ஓவியரான சபா, மூர்த்தி, வீ.கே. போன்ற கைதேர்ந்த ஓவியர்களின் சமகாலத்தவராவார். 79 வயதிலும் ஓவியம் வரைந்து கொண்டிருக்கும் அவரை அவர்து மல்லாகம் இல்லத்தில் சந்தித்தோம்.**

*வினா:*- உங்களுக்கு ஓவியத் துறையில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது.

*விடை:*-நான் நவாலியைப் பிறப்பிடமாகக் கொண டவன். 3 ஆம் வகுப் புப் படிக்கும்போதே நன்றாக ஓவியம் வரைவேன். நான் 4 ஆம், 5 ஆம் வகுப்புகளிற் படிக்கின்ற காலத்தில் எனது உறவினர் ஒருவர் ஆனந்தவிகடன் சஞ்சிகையை ஒழுங்காக வாங்குவார். நான் அவற்றிலுள்ள ஓவியங்களை மட்டுமே பார்ப்பேன். அவை புகழ்பெற்ற ஓவியங்களான கோபுலுராஜ், சந்திரா முதலி ஆகியோரால்வரையப் பட்டவை. அவற்றைப்பார்த்துநானும் வரைய முயன்றதும் எனது வளர்ச்சிக்குக் காரணமாகியது. மேலும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கற்றவேளையில் ஓவியம் கற்பித்த கிருஷ்ணபிள்ளை ஆசிரியரும் எனக்கு வழிகாட்டியாக இருந்தார்.



ஓவியர் சபா

*வினா:*- தமிழகத்தில் நீங்கள் பெற்ற ஓவியப் பயிற்சி பற்றிக் கூறுங்கள்?

*விடை:*- சென்னை அரசினர் நுண்கலைக் கல்லூரியில் 1947 ஆம் ஆண்டிலிருந்து ஆறு ஆண்டுகள் நான் கற்றேன் Dip.in fine Arts Advance Painting என்னும் பட்டக் கல்வி அதுவாகும். அக்கல்லூரியின் அதிபராக இருந்தவர் கல்கத்தாவைச் சேர்ந்த பிரபல ஓவியரும், சிற்பியுமான தேவி பிரசாத்ராஜ் சௌத்ரி, இவர் தமது சிற்பவேலை செய்யும் அறைக்கு எம்மை அழைத்து சிற்பங்களை அடிப்படையாக வைத்து ஓவியக்கலை பற்றி விளக்குவார்.

எமது வகுப்பாசிரியர் மலையாள ஓவியரான ACS பணிக்கர். இவர் மேலத்தேய ஓவியக் கலையைக் கற்பித்தவர்.

*வினா:* அங்கு உங்களுடன் கற்றவர்கள் பற்றியும் நீங்கள் பெற்ற அனுபவங்கள் பற்றியும் சிறிது கூறுங்கள்?

*விடை:* மருதனார்மடம் நுண்கலைப் பீட பகுதிநேர விரிவுரையாளராக இருந்த ராஜரட்ணம் என்பவரும் தமிழகத்தின் புகழ்பெற்ற ஓவியர் லதாவும் (இயற்பெயர் ஸ்ரீநிவாச ஆச்சாரி) என்னுடன் கற்றவர்களில் முக்கியமானவர்கள்.

தேனாம்பேட்டையில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சிக்கு எமது நுண்கலைக் கல்லூரி மாணவர்களும் ஓவியங்களை அனுப்பினார்கள். நான் சிகிரியா ஓவியத்தை இந்தியப் பாணியில் வரைந்து அனுப்பினேன். அது நல்ல விலைக்கு வாங்கப் பட்டமை எனது புகழை அதிகரித்தது. மைசூர், ஹைதராபாத் போன்ற இடங்களில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சிகளிலும் எனது ஓவியங்கள் விரும்பி வாங்கப்பட்டன.

*வினா:* உங்களது பத்திரிகைத்துறை அனுபவங்கள், அட்டைப்பட ஓவியங்கள் என்பன குறித்துக் கூறுங்கள்?

*விடை:* வீரகேசரிப் பத்திரிகையில் 8 வருடங்கள் பணியாற்றினேன். தொடர் கதை, சிறுகதை, கவிதை, கட்டுரைகள் என்பவற்றுக்கு ஓவியம் வரைவது எனது வேலை. பின்னர். "Master's Adrertisement limited" என்னும் நிறுவனத்தில் 20 வருடங்கள் பணியாற்றினேன். பெரிய நிறுவனங்களுக்கு விளம்பரம் தயாரித்துக் கொடுப்பது இந் நிறுவனத்தின் வேலையாகும். அவ்வேளை தினகரன் பத்திரிகையில் பகுதி நேர ஓவியராகவும் கடமையாற்றியுள்ளேன். பின்னர் யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகைக்குப் படம் வரைந்துள்ளேன். இவ்வேளையில் தான் நூல்களுக்கு அட்டைப் படம் வரையத் தொடங்கினேன். பல நூல்களுக்கு அட்டைப் பட ஓவியங்களை வரைந்துள்ளேன். மிக அதிகமாக புலவர் ம.பார்வதிநாதசிவத்தின் நான்கு நூல்களுக்கு அட்டைப்பட ஓவியங்கள் வரைந்துள்ளேன்.

*வினா:* ஓவியக்கலை அனுபவங்களில் உங்களால் மறக்க முடியாத சம்பவம் ஏதாவது இருக்கிறதா?

*விடை:*- ஆம். ஒருமுறை தினகரன் பத்திரிகையில் கவிஞர் ஒருவரின் 'வாருங்கள் அருந்துவோம்' என்னும் கவிதைக்கு ஓவியம் வரையவேண்டியிருந்தது. சிலோடையாக அமைந்த இந்தத் தலைப்புப் பிறரைக் கள் அருந்த அழைப்பதாக இருந்தது. எனக்கு அந்தக் கவிஞரைத் தெரிந்தமையால் கையில் பிளாவுடன் அவரது படத்தையே வரைந்தேன். அடுத்த வாரம் என்னைச் சந்தித்த அவர், எனது படத்தை வரைந்து எனது மானத்தை வாங்கி விட்டீரே? எனது படம் எங்கிருந்து கிடைத்தது? என்று கேட்டதையும் தனது படம் போலவே அப்படியே உள்ளது என்று பாராட்டியதையும் மறக்கமுடியாது.

*வினா:*- உங்களது ஓவியப் பணிக்கு விருதுகள் பாராட்டுக்கள் கிடைத்துள்ளனவா?

*விடை:*- ஆம். 1997 ஆம் ஆண்டு எனக்குக் கலாபூஷணம் விருது கிடைத்தமையை எனது கலைக்குக் கிடைத்த உயர்ந்த கௌரவமாகவே கருதுகிறேன். அத்துடன் தெல்லிப்பழை கலாசாரப் பேரவையால் 'கலைச்சுடர்' என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

*வினா:*- மரபுவழி ஓவியராகிய நீங்கள் நவீன ஓவியத்தையும் வரவேற்கிறீர்களா?

*விடை:*- நான் படித்தது மரபுவழி ஓவியக் கலைதான். தற்போது சில இளைஞர்கள் தமது விருப்பப்படி நவீன ஓவியங்களை வரைகின்றனர். அவற்றை வரவேற்கலாம். ஆனால், ஓவியம் வரைவதை வருவாய் தரும் தொழிலாகக் கொள்வதென் [illegible] ஓவியக்கலைதான் தெரிந்திருக்க வேண்டும்.



*வினா:*-79 வயதிலும் ஓவியம் வரைவது உங்களுக்கு எவ்வாறு சாத்தியமாகிறது?

*விடை:*-என்னிடம் முதுமை காரணமாக ஏற்படும் பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் ஓவியம் வரையவேண்டும் என்ற ஆர்வம் மனதில் இருக்கிறது. அது மட்டுமன்றி இது எனக்கு நல்ல பொழுதுபோக்காகவும் இருக்கிறது. ஓவியம் வரைவதில் ஈடுபட்டால் நோய், துன்பம் என்பன இருந்தாலும் நான் மறந்து விடுவேன்.

*வினா:*- ஓவியக்கலை பயிலும் மாணவர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி என்ன?

'சித்திரமும் கைப்பழக்கம்' என்பார்கள். இயற்கையிற் காணும் எதையும் ஓவியமாக வரைந்து பார்க்க வேண்டும். மாணவனது கையில் ஓவியக் கொப்பி எந்த நேரமும் இருத்தல் வேண்டும். தான் பார்த்த நிகழ்வுகளிலே தன்னைப் பாதித்த நிகழ்வுகளைப் படமாக வரைந்து பயிற்சி பெற வேண்டும். இவ்வாறு வரைகையில் தனது கற்பனையையும் கலந்து வரைய வேண்டும்.

செவ்வி கண்டவர்:- ம.பா.மகாலிங்கசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டதாரிகளுக்கு வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் செயலகத்தில்

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் பட்டதாரி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளன.

விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சின் கீழ் பணியாற்றும் - 2005 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட - பட்டதாரி உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை அடுத்த மாதம் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும் என அபிவிருத்தி நிர்வாக நிறுவனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார் என யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் கீழ் பணியாற்றும் பட்டதாரிகளுக்கான பரீட்சை நாளை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும் என அமைச்சின் செயலாளர் அறி வித்துள்ளார் எனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (202)


### விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொருள்களை யாழ்.- கொழும்பு அல்லது கொழும்பு - யாழ். தினசரி விமானம் மூலமாக உடனுக்குடன் உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும். உங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொழும்பில் கொள்வனவு செய்து அனுப்பிவைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து தரப்படும். அத்துடன் பூதவுடல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். தேவை ஏற்படின் விமானம் சாட்டற் (Charted) செய்து கொடுக்கப்படும்.

**EURO GROUP OF COMPANIES**

35, STATION RD., MOUNT LAVINIA. TEL.0113846998, 0114542190, FAX: 0114542360.
WELLAWATTE BRANCH: 11, VIHARA LANE, COL-06.
TEL: 0114969116, 0773661891.
JAFFNA BRANCH: 22,WYMAN RD.
TEL: 0212223974, 0774207963

(C551183)

### HOLY CROSS SCHOOL OF HEALTH SCIENCE

**DIPLOMA IN NURSING (2YEARS)**

| | |
|---|---|
| விண்ணப்ப இறுதி தினம்: | 12.02.2008 |
| நேர்முகத் தேர்வு: | 17.02.2008 |
| பதிவுக் கட்டணம்: | ரூபா 500/= |
| கற்கைநெறிக் கட்டணம்: | ரூபா 500/= |
| மீளளிக்கக் கூடிய முற்பணம்: | ரூபா 5000/= |
| வகுப்புகள் ஆரம்பம்: | 25.02.2008 |

க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை திருச்சிலுவை சுகநலநிலையம், 769, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும். (சி/551072)

**பணிப்பாளர், திருச்சிலுவை சுகநலநிலையம்.**

நீங்கள் உங்கள் குழந்தைக்கு ஓர் ஆரோக்கியமான, மதிநுட்பத்துடன் கூடிய எதிர்காலமொன்றை பெற்றுக்கொடுக்கின்றீர்களா ?

Cow & Gate

Step-Up 3

AA, DHA மற்றும் FOS என்பன வயிற்றுப் பகுதி தொற்றுநோய்களை கட்டுப்படுத்துவதுடன் மூளை மற்றும் கண் விருத்திகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

AA மற்றும் DHA என்றால் என்ன ? மனித உடல் வளர்ச்சிக்குரிய பல்லாயிரக்கணக்கான [illegible] கொழுப்பமிலங்கள் மற்றும் புரதங்கள் என்பன [illegible] AA மற்றும் DHA என்பன மனித மூளை, கண்களின் [illegible] முக்கிய கொழுப்பமிலங்களாகும். [illegible] கொழுப்பமிலங்கள் தேவைக்கேற்றளவில் கிடைக்கப்பெறாதவிடத்து குழந்தையின் [illegible] முக்கிய அவயங்களின் வளர்ச்சி [illegible] அதனால் இவ்வகையான [illegible] தவிர்த்து குழந்தைகளின் ஆரோக்கியமான மதிநுட்பத்துடன் கூடிய வாழ்க்கையின் ஆரம்பத்தை பெற்றுக்கொடுக்கவேண்டியது பெற்றோர்களின் கடமையாகும்.

FOS என்றால் என்ன ? குழந்தையின் இளம் மென்மையான குடல்களில் பற்றீரியா மற்றும் வைரசுகளின் தொற்றுவால் தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. FOS (Fructo Oligo Saccharides) எனும் பிரதான நார்ப்பொருள், குடற்பகுதிகளில் நன்மை பயக்கும் பற்றீரியாக்களின் உற்பத்தியை ஊக்குவித்து அவற்றின் மூலம் நோய்களை விளைவிக்கும் பற்றீரியாக்களினதும் வைரசுக்களினதும் வளர்ச்சியை கட்டுப்படுத்துகின்றது. இதன் இறுதியான பிரதிபலனாக வயிற்றுப்பகுதி தொற்றுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

1-3 வயது வரையான சிறுவர்களுக்கான போசணைமிகு பாலுணவு




விநியோகஸ்தர்களுக்கான தொடர்பு 0773 - 290192, 0773 - 290187 | விநியோகஸ்தர்கள் டார்லி பட்லர் அன்ட் கம்பனி லிமிட்.


# பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத 70சதவீத மாணவர்களின் எதிர்காலம் என்ன?

## பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கு ஈடாக MCSE கற்கை நெறி

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 70% மானோர் சித்தியடையத் தவறிவிடுகின்றனர். சித்தியடைந்தோரில் 80%மான மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைப்பதில்லை. இவர்களின் எதிகாலம் என்ன? மாற்றுவழி இல்லையா? இது தொடர்பான விளக்கக் கருத்தரங்கு 13.01.2008 அன்று யாழ். நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கு சிறப்புரையாற்றிய யாழ். பல்கலைக் கழக முகாமைத்துறைத் தலைவர் திருமதி தேவரஞ்சினி சிவாஸ்கரன் தற்போதைய உலச்சந்தையில் தொழில் வாய்ப்புகள் தொடர்பாக புள்ளி விவரங்களுடன் உரையாற்றினார்.

உடனடி தொழில் வாய்ப்புகளை இலக்காகக் கொண்ட கற்கை நெறிகள் தொடர்பாக வில்லியம் சாந்தகுமார் கலந்துரையாடினார்.

சர்வதேச சந்தையில் அதிக சம்பளத்தையும் கூடிய தொழில் வாய்ப்புகளையும் கொண்ட படிப்புகள் தொடர்பாக எம்.சி.எஸ்.ஈ. நிறுவன அதிபர் எஸ்.சிவாஸ்கரன் கருத்துரைத்தார். பட்டப்படிப்புகளுக்கு ஈடான உயர் நிறுவனங்களின் அங்கத்துவம் தொடர்பான தகவல்களை வழங்கினார். உலகத் தரம் வாய்ந்த மைக்ரோ சொப்ற் பொறியி யலாளர் கற்கைகள் தலைநகரிலும் வெளிநாடுகளிலும் உள்ள வேலைவாய்ப்புகளும் சான்றுகளுடன் ஆராயப்பட்டது.

மைக்ரோசொப்ற் கணனிப் பொறியிலயாளரான சிவரூபன் கற்கை நெறியொன்றை தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பான தகவல்களை வழங்கினார்.

மைக்ரோசொப்ற் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடத்தப்படும் எம்.சி.எஸ்.ஈ. கற்கை நெறியானது தொழிற் சந்தையில் தொழில் வழங்குவோரினால் பல்கலைக் கழகங்களின் பட்டப்படிப்புகளிற்கு ஈடாக மதிக்கப்படுகின்றது.

கடந்த டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் எம்.சி.எஸ்.ஈ. நிறுவனம் ''மைக்ரோசொப்ற்'' பரீட்சையை நடத்தும் இலங்கையின் நான்காவது நிலையமாக இயங்கி வருகின்றது.


### இந்தியாவில் பிருந்தாவன் கல்லூரியில் படியுங்கள்

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

உயர் தரம் A/L 2 சித்திகளுடன்

பதிவுகள் இப்பொழுது நடைபெறுகின்றன

Company Secretarial Services (Pvt) Ltd.
SMS 011 - 4520270 Name & Address for details
Contact: 0777 317043 (சி/54884)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (முகாமைத்துவ டிப்ளோமா பட்டதாரி), அத்தம் நட்சத்திரம், கி.பாவம் 17, 1976 பிறந்த, அரசாங்க அலுவலருக்கு மணமகள் தேவை ஆசிரியர்கள், பட்டதாரி அலுவலர்கள், வங்கி அலுவலர்கள் மற்றும் அரசாங்க திணைக்களத்தில் உள்ளவர்கள் ஜாதகம், படத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல.3050, மே/ பா உதயன்.

### மணப்பெண் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஆயிலிய நட்சத்திரம் - கடகராசி, ஆஸ்திரேலியா பிரஜையும் புகைத்தல் குடிப்பழக்கம் அற்ற படித்த நற்பண்புள்ள விவாகரத்துப் பெற்ற குழந்தை அற்றவருக்கு குடும்பபாங்கான 48 வயதுக்கு உட்பட்ட துணையை, நண்பர் தேடுகிறார். சைவ போசனமாக உள்ளவராக இருந்தாலும் விரும்பத்தக்கது. எடுப்பதற்கு உரிய ஏற்பாடு உடனே மேற்கொள்ளப்படும். (பொன்சர்)

விளம்பர இல.3050, மே/பா உதயன்


### பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது மகா வித்தியாலயத்தில் நீண்ட காலமாகத் தமிழ் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும் கடமையாற்றி இன்று தனது 57 ஆவது அகவையில் ஓய்வுபெறும்



திருமதி
கிப் பொலிற்றா பிரான்சிஸ்
B.A.Dip.in Edu.

அம்மணி
செந்தமிழ் வித்தகியாய்
கடமையின் சேவகியாய்
தரணி தழைத்திடவே
தம்பணியால்
மாணவர் ஏற்றமுற
உழைத்திட்ட நல்லாசிரியரை
இன்புற்றே நீண்ட ஆயுள்வரை
நலத்துடனே இனிதே வாழ
இறைபாதம் இறைஞ்சி
மனமகிழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்விசாரா
ஊழியர்கள்.

யா/ சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம்,
குருநகர், யாழ்ப்பாணம்.

### கால்நடை வளர்ப்போரை பதிவுசெய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன,27

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் புதிய அங்கத்தவர்களை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் நேற்றுத் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பதிய விரும்புபவர்கள் இல.317, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள சங்கத்தின் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை - மேற்படி சங்கத்திற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக வி.குணபாகனும் செயலாளராக இ.பீற்றர்தாஸும் பொருளாளராக த.கஜேனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (202)


### செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இதுவரை பயிற்சிபெறாத ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (202)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 26 * 01 * 1939

உதிர்வு 28 * 12 * 2007



## அமரர் ஆனந்தமணி யோகநாதன்

(யாழ்.மாநகரசபை மின் இணைப்பாளர் - ஓய்வூதியர்)

அன்பான தந்தையே ஆருயிர்த் தெய்வமே - என்றும்
அணையாத ஒளிச்சுடராய் எமது இதயத்தில் வாழ்கின்றீர்
அறிவூட்டி ஆளாக்கி எங்களை வாழவைத்த தெய்வமே!
அகிலத்தை விட்டுநீர் சென்று திங்கள் ஒன்று கடந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சங்களில் நிறைந்துள்ளன

உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல நாராயணனைப் பிரார்த்திக்கின்றோம்.

218/10, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 6648 (70438)

மனைவி,
பிள்ளைகள்,சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் மிக மூத்த சிறுகதை எழுத்தாளர்கள், நாவலாசிரியர்களில் ஒருவர் சிற்பி. அவர் நாடறிந்த எழுத்தாளர் மட்டுமல்லர்; இரண்டு மூன்று தலைமுறை எழுத்தாளர்களை உருவாக்கிய கலைச் சிற்பியும் ஆவார். 1950களின் பிற்பகுதியில் வெளிவரத் தொடங்கிய தமது ''கலைச்செல்வி'' மாத இதழ்மூலம் பல இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து உருவாக்கியவர். அவர்களில் பலர் பின்னர் ஈழத்தின் முன்னணி எழுத்தாளர்களாக அல்லது கவிஞர்களாகத் திகழ்ந்தனர்; திகழ்கின்றனர். சிற்பி தமிழ் இலக்கியத்துக்குப் புதிய பரிமாணம் சேர்த்த ஈழத்து எழுத்தாளர்களில் ஒருவருமாவார்.

அவர் தமது 19 ஆவது வயதில் எழுதிய ''மலர்ந்த காதல்'' சிறுகதை 1952 இல் சுதந் திரனில் வெளியாகியது. அதுவே அவரது முதற் கதையுமாகும். ஈழகேசரி, வீரகேசரி, தின கரன், சிந்தாமணி, சஞ்சீவி, ஈழநாதம், முரசொலி உட்படப் பல ஈழத்துப் பத்திரிகைகளில் அவரது சிறுகதைகள் வெளியாகின. கல்கி, கலைமகள், மஞ்சரி, தீபம், புதுமை ஆகிய தமிழகச் சஞ்சிகைகளிலும் சிற்பியின் படைப்புகள் வெளியாகின.

அப்போது பிரபல்யம் வாய்ந்த தமிழக சஞ்சிகையான பிரபல எழுத்தாளர் நா.பார்த்த சாரதியின் தீபம் மாத இதழில் ''இலங்கைக் கடிதம்'' எழுதியவர் சிற்பி. - யாழ்.வாசி- என்ற புனைபெயரில்.

சென்னை வாசகர் வட்டம் நடத்திய விமர்சனம் போட்டியில் (1969 இல் ) முதற்பரிசு பெற்றவர். உதயம் சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியிலும் முதல் பரிசு பெற்றார்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்கள் பன்னிருவரின் ஆக்கங்களைத் ''ஈழத்துச் சிறுகதைகள்'' என்ற தொகுப்பாக 1958 இல் வெளியிட்டவர். அதுவே ஈழத்து எழுத்தாளர்களின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு என்ற சிறப்புக்குரியது. அதுவும் சிற்பி ஐயாவின் இலக்கியத் துறைசார் சாதனைகளில் ஒன்று.

''கலைச்செல்வி'' ஈழத்து இலக்கியத் துறையில் ஒரு சகாப்தம். பல எழுத்தாளர்களை உருவாக்கியதோடு அது தனித்துவமும் தரமும் மிக்க தமிழ் இலக்கிய சஞ்சிகையாகவும் மிளிர்ந்தது. சிற்பியின் சாதனைகளுக்கு மகுடமாக - கலசமாக - அது அமைந்தது.

''சிற்பி'' எழுதிய சிறுகதைகள் ''நிலவும் நினைவும் (1958- சென்னை பாரி நிலையம்), சத்திய தரிசனம் (2001-யாழ்.இலக்கிய வட்டம்) தொகுதிகளாக வெளிவந்துள்ளன. ஆறு தசாப்த காலமாக சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் என்று எழுதிக்குவித்திருக்கிறார் - 1952 தொடக்கம் 2001 வரை.

''உனக்காகக் கண்ணே'', ''சிந்தனைக் கண்ணீர்'', ''அன்பின் குரல்'' ஆகியன அவர் எழுதிய நாவல்கள்.

அவரது எழுத்து நடை எவரையும் கவர வைப்பது. சிறிய வசனங்கள், அருமையான வர்ணனை, ஆழமான கருத்துக்கள், தடங் கலற்ற கதையோட்டம். இவை அவரது எழுத் தின் தனிச் சிறப்புகள்.

சிற்பி என்ற சிவசரவணபவன் தொழிலால் ஆசிரியன், வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

அவரது முதலாவது தொகுதியிலிருந்து... கோவில் பூனை என்ற சிறுகதையை இங்கு மறு பிரசுரம் செய்கிறோம். இக் கதை 1956 இல் ''சுதந்திரன்'' பத்திரிகையில் வெளியாகியது.

# கோவில் பூனை

சித்திரை மாதத்துச் சூரியன் கொளுத்து கொளுத்தென்று கொளுத்தினான். கண்களைத் திறக்கவே முடியாதபடி அவ்வளவு வெப்பம் அனல் காற்று வீசியது. வீதியிலுள்ள தார் வெப்பத்தைக் கண்டு குமுறுவதைப் போல் உருகிப் பொங்கியது.

இந்தப் பதைபதைக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது அந்த இரண்டு உருவங்களும் அங்கே நின்று மோனத்தவம் செய்தன. முதலாவதாக அந்த இடத்தை வந்து சேர்ந்தவன் மயிலன். உடம்பெல்லாம் திருநீற்றுக் குறிகள்; நெற்றியிலிட்ட சந்தனப் பொட்டிற்குள் 'பளிச்' சென்று மின்னிக் கொண்டிருந்தது குங்குமம். இரண்டு காதுகளிலும் செவ்வரத்தைப்பூக்கள். கையிலே ஒரு சிறு சாக்குப் பை. அதற்குள்ளே வைக்கப்பட்ட போத்தலில் நிறையத் தண்ணீர் இருந்தது. ஏற்படக்கூடிய கஷ்டங்கள் எல்லாவற்றையும் எதிர் பார்த்தே தன் ஆயத்தங்களைச் செய்திருந்தான். அந்த அகோர வெய்யிலிலும் அவன் தோற்றம் குளிர்மையை வருவித்தது.

சிறிது நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தார் வைத்திலிங்கம் பிள்ளை. சரிந்த தொந்தியிலிருந்து சரிகை வேட்டி வழுவாமலிருக்க அவரது அரைஞாண் பயன்பட்டது. தலையைச் சூரியன் தாக்க, கால்களைத் தார் வீதி கவ்விப்பிடிக்கத் தள்ளாடியபடியே வந்த அவர் 'பஸ்' நிறுத்துமிடத்திற்கு வந்ததும் நீண்டதொரு பெருமூச்சு விட்டார். அவ்வளவு களைப்பு அவருக்கு! காரிலேயே பிரயாணம் செய்து பழக்கப்பட்ட அவருக்கு, சூரிய வெப்பம் எவ்வளவு கொடூரமானது என்பது அப்போதுதான் தெரிந்தது. ஒரு கணம், ஒரேயொரு கணம் வெய்யிலையும் மழையையும் பாராது, குளிரென்றும் கூதலென்றும் பாராது, அவர் போன்ற ஒரு சிலரின் சொகுசான வாழ்க்கைக்காகத் தமது உயிரையே பணயம் வைத்து, இயற்கைச் சக்திகளுடன் இணைந்தும், எதிர்த்தும் ஒருவித சூதாட்டம் ஆடுகின்ற ஏழைப் பாட்டாளி மக்களின் சகிப்புத்தன்மையை நினைத்து அவர் உள்ளம் குளிர்ந்தது!

'அப்பப்பா! என்ன வெய்யில்! இன்றைக்கென்று தான் இப்படி எறிக்க வேண்டுமா?' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டார்.

இவரைக் கண்டதும் மயிலன் சிறிது விலகி நின்றான். அவனைக் கண்ட பிள்ளையவர்கள் தன் முகத்தில் புன்னகையை வருவித்துக் கொண்டார். அவனை அவருக்குத் தெரியும்!

மயிலனுக்கும் அவரை முன்பு எங்கோ பார்த்த ஞாபகம் வந்தது. எங்கே என்றுதான் உடனே நினைவிற்கு வரவில்லை. மூளையைக் குடைந்தான். கடைசியில் நினைவு வந்ததும் முகத்தில் அருவருப்பு ரேகைகள் படர்ந்தன. ஆனால் மரியாதைக்காகப் பதில் புன்முறுவல் பூத்தான்.

இருவர் கண்களும் பஸ்வரும் திசையிலேயே பதிந்திருந்தன. ஏதாவதொரு சிறிய சத்தம் கேட்டாலும் இருவரும் சுறுசுறுப்படைவர். அங்கிருந்து எட்டுமைல் தொலைவிலுள்ள முருகன் ஆலயத்தில் அன்று தேர்த்திருவிழா. அங்கு போகத்தான் இருவரும் பஸ்ஸை எதிர்பார்த்து நின்றார்கள். அதிகப்படியான பஸ்கள் விடப்படுமென்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தும் சென்ற இரண்டு மணித்தியாலயங்களாக அந்தப் பாதையால் ஒரு பஸ்ஸும் செல்லவில்லை.

பிள்ளை போனாற்தான் தேர் இருப்பிடத்திலிருந்து இழுக்கப்படும். அவர்தான் கோவில் முதலாளி. அவர் துடியாய்த் துடித்தார். வெய்யில் ஒரு பக்கம் வாட்டியது. நேர காலத்திற்கு, கோவிலுக்குச் சென்று விட வேண்டுமே என்ற கவலை. நிற்க முடியாமல் நின்றார். உடல் இங்கே; உள்ளம் அங்கே.

***

அன்று காலையில் கோவிலுக்குச் சென்றிருந்தார் பிள்ளை. அன்றைய பொறுப்புக்களை அவர்களிடம் ஒப்படைத்து விட்டுச் சிறிது கண்ணயரலாமெனச் சென்றார். 'அவள்' நினைவு வந்தது. ஓடோடியும் வந்தார் தன்காரில், அவளைப் பார்த்து விட்டுப் போக. அவரை ஏற்றிக் கொண்டு வந்த கார் திரும்பிச் செல்ல மறுத்து விட்டது. அதன் பலன்தான் அவர் வெய்யிலிலே வெந்தது!

நா வரண்டது. சுற்றும் முற்றும் பார்த்தார்! கிட்டிய தூரத்தில் வீடுகள் ஒன்றும் இல்லை. கடைகளும் இல்லை. அந்த வெய்யிலில் அவரையும் மயிலனையும் தவிர வேறெவரும் அங்கே இல்லை. அவளுடைய வீட்டிற்குச் சென்று திரும்புவதற்கிடையில் பஸ் வந்து விட்டால்....

மயிலனுடைய பையினுள் இந்த தண்ணீர்ப் போத்தல் அவர் கண்ணில் பட்டது. வாய் விட்டுக் கேட்டும் விட்டார்.

மயிலன் தயங்கினான். தான் உண்மையில் யாரென்பதைச் சொல்ல விரும்பினான். ஆனால் அவருடைய நடத்தையைப் பற்றிய நினைவு வந்து அது தேவையில்லை என்பதை உணர்த்தியது.

முதன்முதலாக 'அவளு'டன் சேர்த்துத்தான் அவரை அவன் கண்டான். அவள் வேறு யாருமல்ல. இந்த உலகத்திலே 'வாழத்தெரிந்த' ஒரு சில பெண்களில் அவளும் ஒருத்தி. பெயர் லீலாமணி. பார்ப்பதற்கு நல்ல அழகாயிருப்பாள். பால்ய விதவை என்றால் ஒருவரும் நம்பவே மாட்டார்கள். வீதியிலே அவளைக் காண்பது அரிது. வீட்டிலேயே வியாபாரம் நன்றாக நடக்கும்போது, வெளியில் சென்று ஏன் உடம்பை வருத்த வேண்டும்? பிள்ளையைப் போன்ற பல பிள்ளைகளுக்கும், துரைகளுக்கும் அவள் வீடு ஒரு புண்ணியஸ்தலம்; அந்த அம்மாளைத் தரிசிக்க அவர்கள் தவறுவதேயில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், அவள் தனக்குத்தான் சொந்தமானவள் என்று ஒவ்வொருவருமே நினைத்ததாகும்!

இவ்வளவு உத்தமோத்தமரான பிள்ளையவர்களுக்குத் தான் தண்ணீர் கொடுப்பதால் அவருடைய 'தூய்மை' கெட்டுவிடுமா?

மயிலன் கொடுத்த தண்ணீரைப் பிள்ளை 'மட மட' வென்று குடித்து முடித்தார்.

கடைசியில் வந்தது பஸ். அதிலே இருக்க இடமில்லை; நிற்க இடமில்லை; தொங்கிக் கொண்டு செல்லவும் இடமில்லை; அந்த இருவரையும் அங்கேயே விட்டுவிட்டுப் போவதற்குச் சாரதிக்கு மனமும் இல்லை. அப்படியான நாள்களில் தங்கள் மடியையும் நிரப்பாவிட்டால், பஸ்ஸில் வேலை செய்துதான் என்ன பலன்!

பஸ் நின்றது. இருவரும் உள்ளே தள்ளப்பட் டனர்.

அரசாங்கம் மறந்துவிட்ட விஷயங்களுள் அந்த நெடுந்தெருவும் ஒன்றாகும். அது ஒரு பிரதான வீதி என்பதும், தினமும் ஆயிரக் கணக்கானோர் அதை உபயோகிக்கின்றனர் என்பதும் அரசாங் கத்திற்கு மறந்துவிட்டது. பழமையைவிரும்பியோ என்னவோ, முன்னொரு காலத்தில் இருந்த நிலையிலேயே இருக்கும்படி அந்த வீதியை விட்டு வைத் தது அரசாங்கம். வறுமை அரக்கனின் முரட்டுப் பிடியில் சிக்கித்தவிக்கும் ஏழையின் உடல்போன்று ஒரே கோரமாகக் காட்சியளித்தது அவ்வீதி.

இன்னொரு விசேஷம், அந்த வீதியால் ஓடிய பஸ்கள் இலங்கையில் முதன்முதலாக இறக்குமதி செய்யப்பட்ட பஸ்கள் இன்னமும் அந்த வீதியிலே தான் ஓடிக்கொண்டிருந்தன!

சரித்திரப் பிரசித்திபெற்ற இப்படியான பஸ் ஒன்றுதான் பிள்ளையவர்களுக்கும் மயிலனுக்கும் தஞ்சமளித்தது. மூச்சுவிடவே முடியாதபடி அவ்வளவு சன நெருக்கம். பிள்ளை அதைப் பற்றிக் கவலைப் படவில்லை. அன்றைக்கென்று புதிதாக எடுத்து உடுத்த சரிகை வேட்டி கசங்குகின்றதே! அவர் கவலையெல்லாம் அதைப்பற்றித்தான்!

அவர் அணிந்திருந்த மஸ்லின் சட்டை வியர்வையில் தோய்ந்து உடம்புடன் ஒட்டிக் கொண்டது. மற்றவர்களெல்லோரும் வெற்றுடம்புடன்தான் இருந்தார்கள். அவர்களுடன் சேர்ந்து நிற்க என்னவோ போலிருந்தது பிள்ளையவர்களுக்கு. வெளியே எரிந்த வெய்யிலும், பஸ் கொடுத்த குலுக்கம், ஆட்டம் ஆகியவையும் ஒவ்வொருவர் மேனியிலிருந்தும் வியர்வையை ஆறாகப் பெருகச் செய்தது. வௌவாலைப்போல் தொங்கிக் கொண்டு நின்ற மயிலனின் கையில் உற்பத்தியான வியர்வையூற்று சிறிது குள்ளமான பிள்ளையவர்களின் தோள்களில் விழுந்து பக்கத்தில் நின்ற வேறொருவரின் வண்டியில் வழிந்து மற்றுமொருவரின் கால்வழியாக வடிந்து கொண்டிருந்தது!

இந்த வியர்வை நாற்றத்தைப் பிள்ளையவர்களால் சகிக்க முடியவில்லை. இப்படிச் சங்கடமான வேளைகளில் அவருக்கு உதவி புரியும் புகையிலைத் துண்டுகள் அன்று அவரிடம் இல்லை. வெறும் புகையிலையை வாய்க்குள் போட்டுச் சப்புவதில் அவருக்கொரு தனி இன்பம்! அவருடைய கஷ்டங்களைப் போக்கும் சக்தி அதற்கிருந்தது. அது வாய்க்குள் சென்றவு டனே அவர் கற்பனை சிறகுகட்டிப் பறந்து விடும். பின்பு அவருக்கு இந்த உலக நினைவேது!

அவசரத்தில் வீட்டிலிருந்து புறப்பட்டபடியால் புகையி லையை எடுத்துவர மறந்தவிட்டார். பக்கத்தில் நின்ற ஒருவரின் காதுகளில் வாயை வைத்துத் தன் விருப்பத்தை வெளியிட் டார். அவர்கள் கையை விரித்துவிட்டனர்.

கடைசியில் மயிலனைக் கேட்டார். அவனிடம் இருக்காது என்பது அவர் எண்ணம். ஆனால் அவன் புகையிலை வைத்திருந்தான். மறுக்க மனமின்றி அதைப் பிள்ளையவர்களுக்கும் கொடுத்தான்.

இனிமேல் அவருக்குக் கவலையில்லை. பஸ் ஓடிக்கொண்டிருந்த வேகத்தில் கோயிலை அடையுமா என்பது சந்தேகந்தான், என்றாலும் முருகன் அவரைக் கைவிடுவானா?

திடீரென்று 'பிரேக்'கை அழுத்தினான் சாரதி. ஒருவர் மேல் ஒருவர் விழுந்த னர். மயிலனுக்கு மேல் அவர்; அவருக்கு மேல் வெறொருவர்; வியர்வையும் அதுவுமாக மிகவும் கஷ்டப்பட் டனர்.



சிற்பி

மயிலனால் அதைப் பொறுக்கவேமுடியவில்லை. அவருடைய வாய் பரப்பிய மணம் அவனுக்கு வேதனையைக் கொடுக்கவில்லை. ஆனால் அவர் அணிந்திருந்த 'சென்ட்' தான். அவன் மூக் கைப் பிடுங்கியது. இந்தப் புனித நாளிலும் அந்தத் 'துர்நாற்றத்தை' அனுபவிக்க வேண்டுமா?

அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்ட பிரயாணிகள் வெளியேதலையைநீட்டிப் பார்த்தனர். அவர்களெல்லோருக்கும் ஒரே பயம், ஏதும் சிவப்புக் கட்டடம் தெரிகின்றதாவென்று! ஏனெனில் பெற்றோல் குதங்களைக் கண்டால் குறுக்கே இழுக்கும் குணம் அந்த பஸ்ஸுடன் கூடப் பிறந்தது! அவர்களில் ஒருவர் கண்களிலாவது அந்த நிலையம் தென்படவில்லை. அத்தனைக்கும் ஆறுதல்தான்.

சாரதி இறங்கினான். ஒரு சிறு குடிசையை நோக்கிப் போனான். அனைவரும் தலைகளை உள்ளுக்கு இழுத்துக் கொண்டனர். பஸ்ஸிற்கு பெற்றோல் தேவைப்படவில்லை. சாரதிக்குத் தான் தேவைப்பட்டது! அப்போதுதான் அனைவர் நெஞ்சினிலும் தண்ணீர் வந்தது. இனிமேல் பஸ் விரைவில் சென்றுவிடும் என்பதில் அனைவருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டது!

(08 ஆம் பக்கம் பார்க்க.)

# மதக்கருத்து நிலையில் இருவேறு துருவங்களாக நின்ற பாரதியும் அவரது வாரிசு பாரதிதாசனுகும்

மகாகவி பாரதியாருக்கும் பாவேந்தர் பாரதிதாசனுக்கும் இடையில் நிறைந்த ஒற்றுமைகள் உள்ளன. இருவருமே இந்திய தேசத்தின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர்கள்; மூடத்தனத்தைச் சாடியவர்கள்; சமூகக் கொடுமைகளுக்கு எதிராகப் பாடியவர்கள். பாரதியாரின் பாடல்களால் உந்தப்பெற்று அவருக்கு அடிமையான கனக சுப்புரத்தினம் தனது பெயரைப் 'பாரதிதாசன்' எனப் பிரகடனப்படுத்தினார்.



பாரதி

பாரதிதாசன் பாரதியாரின் கருத்துலகச் செல்வாக்குக்கு உட்பட்டவர் என்பதும், இருவரது பாடல்களிலும் உள்ளார்ந்த சிந்தனைத் தளம் ஒன்றென்பதும் பொதுவான கருத்தாகும். ஆனால் பாரதியாரிலிருந்து பாரதிதாசன் வேறுபடும் இடம் தெளிவானது. பாரதியார் தெய்வபக்தி மிகுந்தவர். பாரதிதாசனிடம் அது காணப்படவில்லை என்பது பிரதானமான வேறுபாடாகும்.


பாரதியாருடைய பாடல்களில் அதிகமானவை தெய்வப் பாடல்கள் ஆகும். பாரதியார் இவ்விதமான 77 தெய்வத் தோத்திரப் பாடல்களை ஆக்கியுள்ளார். சக்தியின் மீதும், கண்ணனின் மீதும் அதிக பாடல்களைப் பாடிய அவர் விநாயகர், முருகன், சூரியன், யேசு கிறிஸ்து, அல்லா ஆகியோரையும் பாடிப் பரவியுள்ளார்.

அதேபோல அவரது ஞானப் பாடல்களிலும் தேசியப் பாடல்களிலும் கூட இறையுணர்வே மேலோங்கியிருக்கக் காணலாம். பாரத மாதாவைச் சக்தியாக உருவகித்தே அவர் பாடல்கள் பாடியுள்ளார். குறிப்பாக, பாரதி அறுபத்தாறு கவிதையில்

*வல்லபெருங் கடவுளிலா அணுவொன்றில்லை*
*மஹாசக்தி யில்லாத வஸ்துவில்லை*
*அல்லலில்லை அல்லலில்லை அல்லலில்லை*
*அனைத்துமே தெய்வமென்றால் அல்லலுண்டோ?*

என்று கேட் கிறார்.

முப்பெரும் பாடல்களான பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு ஆகியவற்றிலும் தெய்வ விளிப் பும் போற்றுதலும் ஆங்காங்கே விரவிக் காணப்படுகின்றன.




ஆனால் பாரதி தாசன் தனது பாடல்களில் கடவுளுக்கு முன்னுரிமை தரவில்லை. அவர் ஒரு நாத்திகராக விளங்கியமை அவரது பாடல்களினூடாக அதிகம் புலப்படுகின்றது. அவர் சக்திப் பாட்டினைத் தனது ஆதர்ஸ மான பாரதியாரின் விருப்பத்துக்கிணங்கப் பாடினார். ஆயினும் அந்தச் சக்தியைப் பெண்ணாகக் காட்டிய போதும் கடவுளாக அடையாளப்படுத்தப்பட வில்லை.

*எங்கெங்கு காணினும் சக்தியடா! - தம்பி*
*ஏழுகடல் அவள் வண்ணமடா! - அங்குத்*
*தங்கும் வெளியினிற் கோடியண்டம் - அந்தத்*
*தாயின் கைப்பந்தென ஓடுமடா!*

எனத் தொடரும் அப்பாடல் சக்தியாக இயற்கையையே [illegible] கடவுள் மறுப்பை அவரது [illegible] கும் தமிழும் பாடல் புலப்படுத்தும்.

*'இல்லாத சிவன் முடியை அடியை மேனாள்*
*இரண்டு பேர் தேடினராம் இது புராணம்*
*கல்லாத போக்கிதிலே ஐயமில்லை*
*கடவுளுக்கு வேரில்லை கிளையுமில்லை...'*

எனத் தொடரும் பாடலிலே சிவனுடைய அடிமுடியைத் தேடுவதை நகைக்கும் அவர் தமிழின் அடிமுடியை யாரும் காணமுடியவில்லை எனக் கூற முற்படு கிறார்.

வேறொரு பாடலில் சமயக் கணக்கரையும் கோயிற் குருக்களையும் சமய மடங்களையும் கண்டிக்கிறார். சமய மடங்கள் எனப் படுபவை ஆரியமொழி யாகிய சமஸ்கிருதத்தின் அடியை வருடி வீரியமில்லாது வெதும்பு வதாகக் கூறுகிறார்.

ஆயினும் பாரதிதாசன் முப்பது வயது வரையும் கடவுள் பக்தியுடையவராக - ஆஸ்திகராக - இருந்தமையே அவரது சுய சரிதைக் கவிதையில் காணலாம்.

*முப்பதாண்டு முடியும் வரைக்கும் நான்*
*எழுதிய தனைத்தும் என்ன சொல்லும்?*
*கடவுள் இதோ என்று மக்கட்குக் காட்டிச்*
*'சுடச்சுட அவனருள் துய்ப்பீர்' என்னும்!*

என்று அவர் கூறுவதிலிருந்து 30 வயதுக்கு முன்னர் அவர் தெய்வப் பாடல்கள் [illegible]றது. ஆயினும் அத்த[illegible]ளை அவரது கவிதை நூல்களில் காணமுடியவில்லை.

பாரதியார் ஓர் அந்தண குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரிடம் வைதீக நியமங்களின் செல்வாக்குக் காணப்பட்டது. அந்தச் செல்வாக்கு அவரைத் தெய்வப் பாடல்களைப் பாடத் தூண்டியது. தேசியப் பாடல்களைப் பாடும்போது கூட அவரிடம் தெய்வ உருவகிப்பே மேலோங்கியிருந்தது. எதையும் அவர் கடவுளின் வடி வமாகவே பார்த்தார். அவர் தமிழ், தமிழினம் என்று சிந்தித்தாரெயன்றி ஆரிய மேலெழுச்சியைக் கருதினாரில்லை.



பாரதிதாசன்

'பாப்பானை ஐயரென்ற காலமும் போச்சே' என்ற அவரால் பாட முடிந்தபோதிலும், அவரது கருத்துலகிலிருந்து கடவுளும் மதமும் மதக் கருத்துக்களும் நீங்கிவிட வில்லை.

பாரதிதாசன் திராவிட இனத்தின் வீழ்ச்சிக்கு ஆரிய இனமே காரணமமென்றும் தமிழின் வீழ்ச்சிக்குச் சமஸ்கிருதமும் இந்தியுமே காரணமென்றும், ஆரியரின் மேலாண்மைக்கான - அதிகாரத்துக்கான - கருவியே இந்துமதமும் கடவுளரும் என்ற கருத்துச் செல்வாக்கு உட்பட்டிருந்தார். பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கையில் ஊறித் திளைத்திருந்தார். அதனால் அவரிடம் கடவுள், மதம், அந்தணர், கோயில் நிர்வாகிகள் மீதான எதிர்ப்புணர்வு காணப்பட்டது.

பாரதி யாரும் பாரதிதாசனும் இந்திய தேசிய விடுதலை என்ற சங்கமத்தில் இணைந்திருந்த போதும் மதக் கருத்து நிலையில் இருவேறு துருவங்களாகச் செயற்பட்டமை முக்கியமாகப் பதியப்படவேண்டியது ஒன்றாகும்.

- எஸ்.ஶ்ரீகுமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் நாளை (28.01.2008) மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

**ராஜீவ்,** நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (70466)

## சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம் ஜசுபி பழரசத் தொழிற்சாலை

இந்நிறுவனம் பழங்களை கொள்வனவு செய்து பதனிட்டு இதிலிருந்து ஜாம், கோடியல் மற்றும் உற்பத்திகளை மேற்கொண்டு சந்தைப்படுத்தும் தொழிலை மேற்கொள்கின்றது.

இந்நிறுவனத்தை செவ்வனே சீரமைத்து உற்பத்தி, சந்தைப்படுத்தலை மேற்கொள்ளக்கூடிய உற்பத்தி சந்தைப்படுத்தல் முகாமையாளர் பதவியில் ஒருவரை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியான விண்ணப்பதாரிகள் தமது கல்வி, அனுபவம் முதலியவற்றின் சான்றிதழ் பிரதிகளுடன் சுயவிவரத்தையும் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கவும்.

வயது: 01.02.2008ஆம் திகதியில் 60 வயதிற்கு மேற்படாதவ்ராக இருத்தல் வேண்டும்.
வேதனம் : பேசித் தீர்மானிக்கப்படும்.
(தகைமைக்கும், முன்னேற்றத்திற்கும் ஏற்ப ஊக்குவிப்பும் வழங்கப்படும்)

விண்ணப்பங்களை 05.02.2008ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

சி.குமரவேல்,
தலைவர்,
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்.

25.01.2008 (சி/551235)

## 45ஆம் நாள் நினைவலைகளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 09 . 08 . 1964
உதிர்வு 15 . 12 . 2007

**அமரர் சூரியகாந்தி தவராசா**

(இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், பருத்தித்துறைப் பிரிவு, முன்னாள் கௌரவத் தலைவர், ஆளுநர்சபை உறுப்பினர், யாழ்.கிளை)

நாளை (28.01.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், தொண்டர்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரி வீதி,
பருத்தித்துறை. (70483) **குடும்பத்தினர்.**

## கோவில் பூனை.....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிள்ளையவர்களுக்கு வாயூறியது. சாரதிக்குப் பக்கத்தில் இருந்திருந்தால் இத்தனை நேரம் அவர் 'விடாயும்' தீர்ந்திருக்கும்! ஆனால் இப்போதோ அவ ரால் ஒன்றும் செய்ய முடிய வில்லை. என்றாலும் ஆசை அவ்வளவு இலகுவில் தீர்ந்து விடுமா! நாவைக் கட்டுப்படுத்த முடியாது தவித்தார். வெளியே வர முயன்றார். வருவதற்குள் பஸ் மறுபடியும் புறப் பட்டுவிட்டது.

எல்லோரும் எதிர்பார்த்ததைப் போலவே மிக விரைவாகச் சென்றது பஸ்.

கோயிலை அடைந்தபோது தேரில் சுவா மியை ஏற்றி விட்டார்கள். சனக் கூட்டம் நிரம்பி வழிந்தது. குடிமனைகள் அதிகம் இல்லாத அந்தக் காட்டுப் பிரதேசத்திலும் திருவிழாக் காலங்களில் கூட்டம் சொல்ல முடியாது.

'அரோகரா' என்ற ஒலியுடன் பஸ்ஸிலிருந்து இறங்கினர் அனைவரும். சட்டை கழற்றிய பாம்பைப் போன்று நகர்ந்து கொண்டிருந்தது பஸ்.

மயிலன் தன்னையே மறந்தான். விழாக் கோலத்தில் சுவாமியைக் காண உடம்பு சிலிர்த் தது. அருகேயிருந்த கிணற்றுக்குச் சென்று கை, கால், உடம்பு எல்லாவற்றையும் நன்கு கழுவிக் கொண்டான். தொண்டு செய்வதில் பற்றுக் கொண்டிருந்த அன்பரொருவர் அவனுக்கு உதவி செய்தார். அல்லாவிடில் வெகு தூரத்திலிருந்த கடலுக்குச் சென்றுதான் தன் உடம்பைத் தூய் மைப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

பிள்ளையவர்களுக்கு வீட்டிற்குச் செல்லவே நேரம் இல்லை. கோவிலில் இவர் வருகையைத் தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர் அனைவரும். தேர் இழுப்பதற்கு முன்னர் பிள்ளையவர்கள் கையால் தேங்காய் உடைக்கப்பட வேண்டும்.

வேலையாள் ஒருவன் மூலம் தனது சட்டையைக் கொடுத்தனுப்பினார். வாய்க்குள் போட்டு உமிழ்ந்த புகையிலையைத் துப்ப மனமின்றித் துப்பினார். மடிப்புக் கலையாத சரிகைச் சால்வையை அரையில் வரிந்து கட்டினார். நேரே தேரில் ஏறினார்.

கழுவித் துப்புரவாக வைக்கப்பட்ட தேங்காய் ஒன்று பிள்ளையவர்களிடம் கொடுக்கப்பட்டது. 'முருகா' என்று சொல்லிக் கொண்டே தேங்காயை உடைத்தார்.

தேர்வடத்தைப் பிடித்து இழுத்தனர் சிலர். அத்தனை பெரிய சனக் கூட்டத்திலுள் தேரை இழுப்பதற்குத் தயாராயிருந்தவர்கள் ஏதோ இருபது முப்பது பேர்தான். தங்கள் அருமையான பட்டு வேட்டிகளைப் பழுதாக்கிக் கொள்ள விரும்பவில்லை மற்றவர்கள்.

தேர் அசையவில்லை.

'அரோகரா' 'அப்பனே முருகா' என்று தொண் டர்கள் தொண்டை கிழியக் கத்தியது வானத் தைத் தொட்டது. ஆனாலும் தேர் அசையவில்லை.

ஆள் சேர்க்கும் வேலை ஆரம்பமானது. எங்கோ எல்லாம் திரிந்து பலரைக் கூட்டி வந்தார், ஒருவர். எவ்வளவோ மறுத்த மயிலனையும் அவர் விடவில்லை. அவனுடைய தோற்றம் என்ன சந்தேகப்படும்படியாகவா இருந்தது!

மறுபடியும் 'அரோகரா' என்ற சத்தம்.

தேர் அசைந்தது. பிள்ளையின் முகத்தில் இப்போதுதான் மகிழ்ச்சியின் சாயல் தோன்றியது.

கீழே பார்த்து அங்கு நின்றவர்கள் மேல் தன் புன்னகையை உதிர்த்தார். வியர்த்து விறுவிறுத்துத் தேர் வடத்தைக் கையில் பிடித்துக் கொண்டு கந்தப் பெருமானுக்குச் சேவைசெய்யும் எல்லோர் மேலும் அவர் பார்வை விழுந்தது. அதற்குள் ஒருவன் பிள்ளையவர்களின் காதுகளில் முணு முணுத்தான்.

தேர் வடத்தின் நுனியில் நின்ற ஒருவன்மேல் அவர் கண்கள் குத்திட்டு நின்றன. அவன் யார்? கண் களை அகலத் திறந்தார் பிள்ளை. திருப்புகழ் ஒன்றை வாய்க்குள் முணுமுணுத்தபடி நின்றான் மயிலன்.

அந்தக் காட்சியைக் காணப் பொறுக்க முடியவில்லை பிள்ளையவர்களால். அவருடைய கண்கள் சிவந்தன. ''அவனை யார் தேர்வடத் தைத் தொடச் சொன்னது? அந்தச் சனியனைத் துரத்துங்கள்...'' ஆத்திரத்துடன் உத்தரவிட்டார் ஆண்டவனுக்கு அருகில் நின்ற தர்மகர்த்தா.

மறுகணம்...

வெறிகொண்ட மக்கள், அது கோயில் என்பதையும் மறந்து மயிலனை நையப் புடைத்தனர். அவனுடைய அவலக் குரலை, அவனுடைய முதுகு, தோள் முதலியவற்றில் விழுந்த அடி, உதைகளின் சத்தம் அமுக்கியது. அவன் மயங்கி விழும் வரைக்கும் பக்த கோடிகள் தம் கைவரிசையைக் காட்டினர்.

மயிலன் என்ற மயில்வாகனத்திடமிருந்து முருகப் பெருமானின் ரதத்தை இழுத்துச் செல்லும் உரிமை யைப் பறித்த உற்சாகத்தில் தன் சரிகைச் சால்வையை ஒருதரம் அவிழ்த்துக் கட்டினார் பிள் ளையவர்கள்.

உள்ளத்தால் கள்ளமில்லாதவன் உதைத் தொதுக்கப்பட்டான்; உருத்திராட்சப் பூனையொன்று உல்லாச பவனி வந்து கொண்டிருந்தது. ★

Opening Ceremony
**TEKNEL COMPUTERS**
TECHNOLOGY Nelliady
Opening Ceremony Of
**TEKNEL COMPUTERS**

On 28th of January 2008, Monday Between 9.46 a.m. to 12.35 p.m.
Will be Declared by
**Mr.A.Selvavinayagam**
(EASWARY JEWELLEARY POINT PEDRO)
Proprietor
**Mr.S.Vipilan**
Kodikama Road, Nelliady. T.P.: 0777069934. (70490)

## VACANCY FOR A DRIVER

**UN-HABITAT**, Jaffna invites applications for the post of a driver for MOSS compliant vehicle. Applicants should have G.C.E. O/L Exam pass with driver's license and good knowledge in minor vehicle repairs. Should be able to utilize the MOSS compliant equipments associated with the vehicle and have more than two years driving experience in similar vehicles. Should be able to converse fluently in Tamil / Sinhala and English as 2nd languages.

Preference will be given to those who have worked with UN Agencies/NGOO

1. Salary;Monthly: Rs.36,356/= (Fixed)
2. Duration of Contract: 05 months (May be extended if required)

Please apply before 01.02.2008 with Bio Data.
Contact details;Address: No.84, Temple Road, Jaffna
Telephone: 021 222 8137, 060 221 6419.
Fax: 021 222 8137
Email:kparamunhab@sltnet.lk

**District Manager.** (c/551229)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**பரிமளம் கந்தையா**
(பரிமளம் ரீச்சர்)

பிறப்பு 31★12★1922
இறப்பு 27★12★2007




உம்மை உருக்கி மண்ணில் எம்மை வளர்த்தீர்!
அறிவு சொல்லி எமக்கு ஆளுமை தந்தீர்!
சொல்லவில்லை செல்கிறேன் என்று - ஆனால்
நீங்கள் எங்கு சென்றாலும் - அம்மா
என்றும் எங்களுடன்தான் நீங்கள்...

மீசாலை வடக்கு,
மீசாலை. (சி/551213) குடும்பத்தினர்.


# Brown & Co. Ltd.

SHARP வழங்கும் ஜப்பானிய உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய
SHARP Digital Photo Copiers



- ஒரு வருடம் அல்லது 50,000 பிரதிகளுக்கு உத்தரவாதம்.
- முதல் ஒரு வருடத்திற்கு மாதாந்தம் இலவச Services.
- இயந்திரத்துடன் 16000-18000 (A4) பிரதிகள் எடுக்கக்கூடிய Toner - 01 Developer - 01 என்பன இலவசம்.
- சிறப்புத் தேர்ச்சிமிக்க தொழில்நுட்ப வல்லுநர்களால் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படுவதால் விற்பனைக்குப் பிந்திய தரமான, நம்பிக்கையான சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் என்றும் முன்னணியிலுள்ள ஒரே நிறுவனம்.

தொடர்புகளுக்கு: 021 222 4040
0777 585909
077 6623824

Brown & Co. Ltd.
காட்சியறை
89, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(70463)

# BE A DOCTOR


## பெலாரஸ்

மருத்துவ டொக்டர் MD ஆங்கில மூலம் 2008ஆம் ஆண்டு உள்ளாங்கலுக்கான அனுமதி
இலங்கை மருத்துவ சபையின் அங்கீகாரம் பெற்றது



VITEBSK MEDICAL UNIVERSITY

-நுழைவு விசா உத்தரவாதம் - அழைப்புகள், அனுசாலைக் கடிதங்கள், வங்கி அறிக்கைகள், விசா நேர்காணல் தேவையில்லை.
-PATHE அனுமதிக்கு விண்ணப்பித்த பின் அனுமதியும் விசா முடிவுகளும் 20 நாள்களில்
-கல்விக்கடன் 5 நாள்களில் ஏற்பாடு.
-இலவச தங்குமிடம், இணையத்தளம், பொழுதுபோக்கு, நூலகம், ஆய்வுகூடம், செயல்முறைக்கல்வி மற்றும் பீர்ட்சைக் கட்டணம்.
-போக்குவரத்து மற்றும் உணவு விசேட விலைக்குறைப்பு
-200 இலங்கை மாணவர்களும் பட்டதாரிகளும் இலங்கை மற்றும் உலகம் முழுவதும் பணியாற்றுகிறார்கள்.
-ஐரோப்பாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் வெளிநாட்டவர்கள் படிப்பதற்கு பாதுகாப்பான இடங்களில் ஒன்று (ஆசிய நாட்டவர் நட்புறவுடன் வாழும் சூழல்)
-24 மணிநேரமும் இலங்கையர்களைக் கொண்ட குழுவொன்று உதவி ஒத்தாசை புரியும்.
-வழங்கப்படும் பட்டம் MBBS தரத்துக்கும் மேலானது. ஐக்கிய ராஜ்யம், ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியுஸிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஹொலந்து, சுவிட்சர்லாந்து, ஸ்கண்டிநேவியா, மாலைத்தீவுகள், இலங்கை உலக சுகாதார ஸ்தாபனம் அடங்கலாக உலகம் முழுவதும் மதிக்கப்படுவதும் அங்கீகரிக்கப்படுவதுமாகும்.
-கோடை விடுமுறைக் காலத்தில் ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஐக்கிய ராஜ்யம் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று பகுதிநேரம் உழைக்க வாய்ப்பு.
-பட்டம் பெற்ற பின் ஐரோப்பிய நாடுகளுக்கு இடம்பெயரும் வாய்ப்பு
-வருடாந்த பல்கலைக்கழகக் கட்டணத்தை இரண்டு தவணைகளில் செலுத்தலாம்.
-PATHE மூலமாக அனுமதி பெற்ற மாணவர்களின் பட்டியலை இணையத்தளத்தில் பார்க்கலாம். அல்லது எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



எம்முடன் பேசுமுன் அவர்களுடன் கதையுங்கள்!!

EPRM/ACT 16 பரீட்சை பாடத்திட்டத்திற்கு இணையாக இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.
பெலாரஸ் பிரதிநிதி ஒல்கா செரிக்கோவாவினால் ஜனவரி மற்றும் பெப்ரவரி 10ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு இலவசக் கருத்தரங்கு நிகழ்த்தப்படும்.

கருத்தரங்கு தினத்தில் விண்ணப்பம் செய்து இலவச மருத்துவ ஆங்கில பயிற்சிநெறியினை PATH இல் பெற்றுக்கொள்ளுங்கள்.

முன்பதிவை மேற்கொள்வதன் மூலம் மட்டுமே கருத்தரங்குக்கான அனுமதி பெற இயலும்.
பொறியியல்துறை (தகவல் தொழில்நுட்பம்) மற்றும் ஏனைய கற்கைநெறிகளும் கற்பிக்கப்படும்.

அனுமதிகளுக்கும் விசாரணைகளுக்கும்: 077 3017883, 077 3558484

**PATHE ACADEMY**
Overseas Student Placement Department
111 - 1/2 Maya Avenue, Colombo 06. Tel : 2586418. www.patheacademy.org
Colombo Ads - 0714 315841


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் மூத்த வீரர்கள் ஐவருக்கு அடிலெய்ட் டெஸ்ட் இறுதிக்களம்........!

தொடரை சமன் செய்யும் முனைப்புடன் உள்ள இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி டெஸ்டை எதிர்கொண்டது.

கும்ளே தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரண்டு அணிகளுக்குமிடையே 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மெல்போர்ன் மற்றும் சிட்னியில் நடந்த டெஸ்டில் ஆஸ்திரேலியா அணி வெற்றி பெற்றது. பெர்த்தில் நடந்த 3ஆவது டெஸ்டில் இந்தியா 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வரலாற்று சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றது. இதையடுத்து தொடரில் ஆஸ்திரேலியா 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

இந்த நிலையில், இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி அடிலெய்டில் கடந்த வியாழக்கிழமை தொடங்கியது. சமன் செய்யவேண்டிய சிட்னி டெஸ்டில் நடுவர்களின்

## தொடரை சமன் செய்வதே இந்திய அணியின் இலக்கு

தவறான தீர்ப்புகளால் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றுவிட்டது. இல்லாவிட்டால் இப்போது தொடர் யாருக்கு என்ற உச்சக்கட்ட நிலை உருவாகியிருக்கும்.

இருப்பினும் பழையதை மறந்து பெர்த்தில் பெற்ற வெற்றியின் முழு உத்வேகத்துடன் இந்திய அணி களம் இறங்கியுள்ளது. தொடரை சமன் செய்யும் நம்பிக்கை இந்தியாவிடம் அதிகம் காணப்படுகிறது. அதேசமயம் டெஸ்ட் முடிவதற்கு முன்பாக ஒருநாள் தொடரிலிருந்து கங்குலி, டிராவிட் நீக்கப்பட்ட தகவல் அவர்களை வெகுவாக பாதித்திருக்கிறது. இதனால் அவர்கள் கடைசி டெஸ்டில் எப்படி ஆடுவார்கள் என்ற எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

இந்திய அணியின் தலைவர் கும்ளே (வயது - 37), கங்குலி (வயது - 35), டிராவிட் (வயது - 34), டெண்டுல்கர் (வயது -34), வி.வி.எஸ். லட்சுமண் (வயது - 33) ஆகிய ஐந்து மூத்த வீரர்களுக்கு ஆஸ்திரேலிய மண்ணில் இதுவே கடைசி டெஸ்ட் போட்டியாக இருக்கும் என்று கருதப்படுகிறது. ஏனெனில், அடுத்த பயணம் வர இன்னும் 4 ஆண்டுகள் ஆகும்.

### மைதானம் பற்றி...

அடிலெய்ட் மைதானத்தில் 1884ஆம் ஆண்டு முதல், டெஸ்ட் போட்டிகள் நடந்து வருகிறது. இங்கு இதுவரை 65 டெஸ்ட் போட்டிகள் நடந்துள்ளன. இதில் 49 போட்டிகளில் முடிவு கிடைத்துள்ளன. ஆஸ்திரேலியா 33 டெஸ்டில் வெற்றியும், 16இல் தோல்வியும், 16இல் சமநிலையும் கண்டுள்ளது. இந்தியா - ஆஸ்திரேலியா இடையே இங்கு நடந்த 8 டெஸ்களில் 5 இல் ஆஸ்திரேலியாவும், இந்தியா ஒரு டெஸ்டிலும் வெற்றி பெற்றுள்ளன. மற்ற 2 ஆட்டம் சமநிலையில் முடிந்தது. இந்திய அணி 2003ஆம் ஆண்டு நடந்த பரபரப்பான டெஸ்டில் அந்த வெற்றியை 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ருசித்தது. இதில் டிராவிட் 233 ஓட்டங்களும் லக்ஸ்மன் 148 ஓட்டங்களும் குவித்தது அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தது.

விளையாட்டு அரங்குகளில்

இங்கு கடைசியாக கடந்த 10 ஆண்டுகளில் நடந்த எல்லா டெஸ்டிலும் முடிவு கிடைத்திருப்பது குறிப்பிட தகுந்த விடயமாகும். 1948ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக ஆஸ்திரேலிய அணி 674 ஓட்டங்களை குவித்தது இந்த மைதானத்தின் அதிக பட்ச எண்ணிக்கையாகும். 2003ஆம் ஆண்டில் சேர்த்த 523 ஓட்டங்கள் இந்தியாவுக்கு அதிக




பட்சமாகும். ஆஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் அதிகபட்சமாக 56 விக்கெட்டுகள் (13 டெஸ்ட்) வீழ்த்தியுள்ளார்.

### அனில் கும்ளே கருத்து

கடைசி டெஸ்ட் குறித்து இந்திய அணியின் தலைவர் அனில் கும்ளே கூறியதாவது:-

"இதுதான் எனது கடைசி ஆஸ்திரேலிய சுற்றுப்பயணமாகும். எனவே வெற்றியுடன் நாடு திரும்பினால் இனிதாக இருக்கும். 3ஆவது முறையாக நான் ஆஸ்திரேலியா வந்துள்ளேன். இது ஒரு அருமையான பயணம். ஒவ்வொரு சுற்றுப்பயணத்திலும் மகிழ்ச்சியாக விளையாடி இருக்கிறேன்.

அணியைத் தேர்வு செய்வது என் கையிலில்லை. கடைசி டெஸ்ட் போட்டிக்கு முன்பாக ஒருநாள் போட்டி அணியைத் தேர்வு செய்தது குறித்து நானும் யோசித்தேன். அது சரியானதாகப்படவில்லை. இருப்பினும் அப்படி தான் நடக்கிறது. இது வருத்தம் அளிக்கிறது. அணியில் தேர்வு செய்யப்படாத வீரர்களை உற்சாகப்படுத்த வேண்டும். அவர்களும் ஏமாற்றம் அடைந்திருப்பார்கள். இருப்பினும் அவர்கள் ஏராளமான போட்டிகளில் விளையாடி அனுபவம் பெற்றவர்கள். இதை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவம் அவர்களுக்கு உண்டு. இந்திய கிரிக்கெட் அணிக்கு இந்த டெஸ்ட் வெற்றி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது அவர்களுக்குத் தெரியும்.

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு அடிலெய்டிலிருந்து தான் இந்திய அணி தனது சிறப்பான பயணத்தைத் தொடங்கியது. இப்போது இங்கேயே டெஸ்ட் தொடரை சமன் செய்யும் வாய்ப்பு நமக்குக் கிடைத்திருப்பது சிறப்பு வாய்ந்ததாகும்".

### பொண்டிங் கருத்து

"ஒருபோட்டியில் அடைந்த தோல்வியால் ஆஸ்திரேலிய அணி சரிவை நோக்கி போயக் கொண்டிருப்பதாக அவசரப்பட்டு முடிவெடுத்துவிடக்கூடாது. இதுபற்றிய விமர்சனங்களும் தேவையற்றது. கிரிக்கெட்டில் இதுபோன்ற தோல்விகள் ஏற்படுவது சகஜம் தான். உலகக் கிண்ணத்தின் போட்டிக்கு முன்பு இதேபோல் நடந்தது. அதன் பிறகு உலகக்கிண்ணப் போட்டியில் ஒரு தோல்வியும் அடையாமல் வெற்றி பெற்று கிண்ணத்தை தக்க வைத்துக்கொண்டோம்.

கடந்த டெஸ்டில் நாங்கள் என்னென்ன தவறுகள் செய்துள்ளோம் என்பதை ஆராய்ந்து பார்த்தோம். அவை அனைத்தும் சரி செய்யப்படும். சூழ்நிலைக்கு ஏற்ற மாதிரி ஆட்ட முறையிலும் மாற்றம் இருக்கும். இந்த டெஸ்டில் சுழற்பந்து வீச்சுக்கு முக்கியத்துவம் அளிப்போம். அதேசமயம் டெய்ட் போன்ற விக்கெட் வீழ்த்தும் திறமையான பந்துவீச்சாளரை வெளியில் உட்கார வைப்பது மிகவும் கடினமான காரியமாகும்.

டிலான்

ஒருநாள் தொடரில் இருந்து கங்குலியை நீக்கியது அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் உள்ளது"- என்றார். ★

# அமோக விளைச்சலைக் கொடுத்துள்ள இவ்வாண்டுக் காலபோக நெற்செய்கை

இவ்வாண்டில் காலபோக நெற்செய்கை யாழ்.குடாநாட்டில் அமோக விளைச்சலைப் பெற்றுள்ளது. கடந்த காலங்களில் எக்கருக்கு 31 புசல் அல்லது 48 புசல் வரை பெற்ற நெல்வயல்களில் சராசரி 72 புசலும் அதற்கு மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது.



வயது குறைந்த நெல் விதைத்த விவசாயிகளின் வயல்கள் தற்போது அறுவடை முடிந்து சூடு அடித்துப் பெற்ற பெறுபேற்றின்படியே இவ்வாறு கணக்குச் சொல்லப்படுகின்றது.

நெல் உற்பத்தி இவ்வாண்டு குடாநாட்டில் நல்ல உற்பத்தியைப் பெறுவதற்கு காலாகாலத்தில் பெய்த மழை மட்டுமல்லாது, விதை நெல், உர வகைகள் நேர காலத்தோடு கப்பல் மூலம் வந்து சேர்ந்தமை தான் காரணம். அத்தோடு யாழ். அரச அதிபர் , கமநல உதவி ஆணையாளர் , பிரதி விவசாயப் பணிப்பாளர் ஆகியோரையும் அவர்களுடன் இணைந்து செயற்படும் ஏனைய அரச அதிகாரிகளுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்கள் விவசாயிகள்.

அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கப்படும் மானிய உரம் ஏழை விவசாயிகளுக்குப் பெரும் உதவியாக அமைந்துள்ளது. இந்த மானிய உரம் தென்பகுதியில் பலவித மோசடிகளுக்கு உட்பட்டு வருவதாக செய்திகள் கூறுகின்றன.

தென்னிலங்கையில் இம்மோசடி குறித்து நடவடிக்கை எடுக்கச் சட்டத்திருத்தம் தேவையெனச் சில செய்திகள் தெரிவிக்கின்றன. அடுத்த காலபோக நெற்செய்கைக்கு மானிய உர விநியோகம் நடைமுறையில் இருக்குமா என்பது சந்தேகமாம்! 2000ஆம் ஆண்டு வரை ஓர் அந்தர் யூரியா உரம் எண்ணூறு ரூபா தான். ஆனால் மானிய உரத்துக்கு ரூபா முந்நூறும் வெளி விலை தற்போது மூவாயிரத்து ஐந்நூறும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் மானிய விலையில் உரம் பெற முடியாத மேட்டுநில விவசாயிகள் கூடிய விலையில் உரம் பெற்று தமது விவசாய உற்பத்தியை மேற்கொண்டார்கள். அடுத்தடுத்த மாதங்களில் விலைவீழ்ச்சி ஏற்பட தமது உற்பத்திகளை எவ்வாறு விற்பது என ஏங்குகிறார்கள்.

இவ்வாண்டு நெல் விலையும் வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த ஆண்டு ஒரு மூடை (எழுபது கிலோ) ரூபா நாலாயிரம்வரை விலை போனது. இவ்வாண்டு சிவப்பு அரிசி இறக்குமதி செய்யப்படுவதாகக் காரணம் கூறி ரூபா மூவாயிரம் வரை விற்பனையாகின்றது. நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகள்கூட உழவு ஏனைய கூலி போன்றன அதி உச்சத்தில் செல்வதால் தமது உற்பத்திச் செலவுக்கு தற்போதைய விலை கட்டுப்படியில்லை எனக் கவலை தெரிவிக்கிறார்கள்.

எனினும், குடாநாட்டு மக்களோ தற்போது பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளனர். [illegible] கள், எரிபொருள் [illegible] விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. நெல்லுக்குத் தேவையான உரம் மானியமாக வழங்கப்பட்டமையால் விவசாயிகள் நெல்லின் விலையை அதிகரித்துக் கொள்ளை இலாபம் ஈட்டாமல் சாதாரண மக்களுக்கும் கிடைக்கும் வகையில் குறைந்த விலையில் விற்கவேண்டுமெனப் பொதுமக்கள் கூறுகின்றார்கள்.

தென்மராட்சியில் கடந்த வெள்ளிக்கிழமை வயல் விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கைதடி கமநல பிரிவில் உள்ள நாவற்குழி 'நெணியன்' வயல் வெளியில் இப்பகுதி விவசாயப் போதனாசிரியர் ஆ.சிவபாலன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், கமநல சேவைகள் உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன், கமநல அபிவிருத்தி அதிகாரி வை.பாலகிருஷ்ணன் உட்பட விவசாயத் திணைக்கள அதிகாரிகள், இப்பகுதி விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## தென்பகுதியிலிருந்து விதை நெல்லை தருவிக்காமல் இங்கேயே அதனைப் பெறுவதே சிறந்தது

இவ்வாண்டு பரீட்சார்த்தமாக உற்பத்தி செய்யப்பட்ட 'விதை' நெல்வகைகள் இப்பகுதி விவசாய நிலங்களில் நல்ல விளைச்சலைக் கண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வயது கூடிய நான்கு மாத நெல் இனமான ஏ.ரி. 402, வி.ஜி.406 மற்றும் மூன்றரை மாத நெல் ஏ.ரி.362, மூன்று மாத நெல் ஏ.ரி.303, ஏ.ரி.307, வயது குறைந்த விசேட இனமான இரண்டரை மாத மேட்டு நில உற்பத்திக்கு உகந்த பி.ஜி.250 ஆகிய விதை நெல் இங்கு உற்பத்தி செய்யப்பட்டிருந்தன.

எதிர்காலத்தில் தென் மாகாணத்திலிருந்து விதை நெல்லை தருவிக்காமல் இங்கேயே [illegible] உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமெனப் பிரதி விவசாயப் பணிப்பாளர் கூறினார்.

வட மாகாணத்தில் ஒன்பதாயிரம் ஹெக்டேயர் வயல் நிலம் உள்ளதாகவும் இதில் ஒரு பகுதி வயல்களே விதைப்புச் செய்யப்பட்டதாகவும் இந்த உற்பத்தி யாழ். மாவட்டத்தின் இரு மாத காலத் தேவைக்கே போதுமானது எனவும் தெரி விக்கப்பட்டது. ஆனால் இன்றைய யுத்த காலத்துக்கு முன், வடபகுதி உற்பத்தி ஆறு மாதங்களுக்குப் போதுமானது எனக் கூறப்பட்டு வந்தமை நினைவில் நிற்கிறது.

### கட்டாந்தரையாக 5,000 ஏக்கர் நிலம்

தென்மராட்சியில் கிழக்கே எழுதுமட்டுவாழ், மிருசுவில் பகுதி, மேற்கே வாணிப் பகுதி மற்றும் தென்மராட்சி தெற்கே தனங்களப்பு, மறவன்புலோப் பகுதிகளில் ஏறத்தாழ ஐயாயிரம் ஏக்கர் நெல்வயல்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் கடந்த ஏழு வருடங்களாக நெல் உற்பத்தி செய்யப்படாமல் கட்டாந்தரவையாக, புல் வெளியாக, தன்மை கெட்டு கடல்நீர் புகுந்து உவர் நிலமாக மாறி வருகின்றது.

2004ஆம் ஆண்டில் மறவன்புலோப் பகுதியில் 1,000 ஏக்கர் வரையான வயல்கள் நெற்செய்கைக்கு விடப்பட்டு, உலக உணவுத் திட்ட உதவிகள் பெற்று நெல் உற்பத்தி செய்யப்பட்டு, பெரு விளைச்சல் பெறப்பட்டது. பின்னர் அப்பகுதியும் தடைப்பட்டுப் போனது.

தனங்களப்பில் வாழ்ந்த நூற்றி ஐம்பது குடும்பங்களும், மறவன்புலோவில் முந்நூறு குடும்பங்களும், இன்றும் மீளக்குடியேறாத நிலையிலும் விவசாய வருமானம் இல்லாத நிலையிலும் பல்வேறு இடங்களிலும் கஷ்டத்துடன் வாழ்கிறார்கள். இவர்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டு அவர்களின் வயல் நிலங்கள் நெல் உற்பத்திக்கு அனுமதிக்கப்படுமானால் யாழ். மாவட்ட நெல் அரிசித் தேவையை பெருமளவு தீர்க்கலாம்.

எப்போது தாம் மீளக்குடியேறி நிம்மதியாக வாழ்வோம் என ஏங்கும் இவர்கள் விரைவில் மீளக்குடியேறி நிம்மதியாக வாழ, இறைவனை வேண்டுவோமாக. +

மாணிக்கல்லா விநோதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 800 ஆண்டுகள் பழமையான கப்பல்



சீனாவின் குவாங்டோங் மாகாணத்தில் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த கப்பல் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. கப்பல் நீரில் மூழ்கியிருப்பதை 987 ஆம் ஆண்டு சீனர் கண்டுபிடித்தனர்.

இக்கப்பல் இருபது வருடங்களின் பின்னர் கடந்த டிசெம்பர் 22ஆம் திகதி அன்று வெளியே எடுக்கப்பட்டுள்ளது.

30 மீற்றர் கடல் மணலுக்குள் அக்கப்பல் புதையுண்டு காணப்பட்டுள்ளது. தற்போது வெளியே எடுக்கப்பட்ட கப்பல் இன்னொரு கப்பலின்மேல் வைக்கப்பட்டுள்ளது.

இக்காட்சியை சீனாவின் அனைத்து ஊடகங்களும் ஒளிபரப்புச் செய்தன. இக்கப்பலிலிருந்து தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களினால் செய்யப்பட்ட 4 ஆயிரம் கலைப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

இக்கப்பலை சீனாவின் அருங்காட்சியகத்தில் வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 800 ஆண்டுகளுக்கு முன்னரே சீனர் மேலைத்தேய நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கைகளைக் கடல்வழியாகவும் மேற்கொண்டு வந்தனர் என்பது தெரிய வந்துள்ளது.

# செவ்வாய்க் கிரகத்தில் மனிதன்



நாஸா விண்வெளி ஆய்வு மையம் சார்பில் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட ஸ்பிரிட் விணகலம் அனுப்பிய புதிய படம் ஒன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அப்படம் செவ்வாய்க் கிரகத்தில் மனித உருவம் ஒன்று காணப்படுவதைப் புலப்படுத்தி நிற்கின்றது.

பூமியிலிருந்து 10 கோடி மைலுக்கு அப்பால் உள்ள செவ்வாய்க் கிரகம், விண்வெளி ஆராய்ச்சியாளர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் அரிய பொக்கிஷமாக விளங்கி வருகிறது. சிவப்புக் கிரகம் என்று அழைக்கப்படும் செவ்வாய்க்கிரகத்தில் நமது பூமியில் இருப்பது போன்றே பாறைகளும் மணல் குன்றுகளும் உள்ளன. அங்கு தண்ணீர் இருந்ததற்கான ஆதாரங்களும் கிடைத்திருப்பதால் செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்கள் வசிக்கலாம் அல்லது ஒரு காலத்தில் வசித்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதை அடிப்படையாகக்க கொண்டு பல நாவல்களும், திரைப்படங்களும் வெளிவந்துள்ளன. இந்த நிலையில், செவ்வாய்க்கிரகத்தில் மனிதர்கள் இருப்பதற்கு மேலும் மேலும் வலுச்சேர்க்கும் விதத்தில் புதிய ஆதாரம் ஒன்று கிடைத்துள்ளது.

அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு மையம் சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட செயற்கைக் கோள் மூலம் 'ஸ்பிரிட்' விண்கலம் (6சக்கரங்கள் கொண்ட ரோபோ) செவ்வாய்க் கிரகத்தில் இறக்கப்பட்டது. அது பல மாதங்கள் அங்கு செயற்பட்டு பல்வேறு தகவல்களையும், புகைப்படங்களையம் அனுப்பிவைத்தது. அந்த ரோபோ அனுப்பிய புதிய படம் ஒன்றுதான் இப்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

அது அனுப்பிய ஒரு படத்தில் மனித உருவம் இடம்பெற்றிருப்பது விண்வெளி ஆர்வலர்களின் புருவத்தை உயர்த்த வைத்துள்ளது. அந்தப்படத்தில் பூமியிலிருப்பது போன்ற பரந்து விரிந்த பாலைவனம் போன்ற மணல் பகுதியும் ஆங்காங்கே பாறைக் குன்றுகளும் காணப்படுகின்றன. அதில் ஒரு குன்றிலிருந்து மனித உருவம் இறங்குவது போன்ற காட்சி இடம்பெற்றுள்ளது. தலையைப் பக்கவாட்டில் சாய்த்தபடி சமனிலை செய்து கொள்வதற்காக வலதுகையை நேராக நீட்டியபடி மெதுவாகக் கீழே இறங்குவது போல் அந்த உருவம் காட்சி அளிக்கிறது.

இந்த அரிய புகைப்படம் விஞ்ஞானிகளின் ஆய்வுக்கு புதிய 'தீனி'யாக அமைந்துள்ளது. செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்கள் வாழ்வதற்கான முக்கிய ஆதாரம் இது என்று ஒரு தரப்பினர் கூறுகின்றார்கள். ஆனால், எதிர்த்தரப்பினர் இது வெறும் 'மாயை' என்கிறார்கள். பாறையின் மீது பட்ட வெளிச்சத்தின் நிழல், 'செவ்வாய்க் கிரகவாசி' போல் தோற்றம் அளிக்கிறது என்பது அவர்களின் வாதம். எது எப்படியோ, வெறும் வாயை மெல்பவர்களுக்கு அவல் கிடைத்ததுபோல், விண்வெளியின் இந்த அபூர்வ 'விசித்திர காட்சி' பற்றி அவரவர் விருப்பம் போல் கற்பனை செய்து கொள்ளலாம்.

# அமெரிக்காவின் நவீன உளவுச் செய்கோள்



அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட நவீன உளவு செய்கோள் ஒன்றை 2011ஆம் ஆண்டு விண்ணுக்கு ஏவவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பேசிக் (BASIC) எனப் பெயரிடப்பட்ட இந்த செய்கோள் ஏற்கனவே அமெரிக்காவினால் விண்ணுக்கு ஏவப்பட்டிருக்கும் பல செய்கோள்களைவிட மிகவும் நவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட அடுத்த தலைமுறை செய்கோள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டுப்படைகளின் வலிமை, படை நடவடிக்கைகள் எனப் பல உளவுத் தகவல்களை மிகவும் துல்லியமாகப் படம் பிடித்து சரியான ஆழ்கூறைக் கணிப்பிடக்கூடியளவுக்கு இச் செய்கோள் திறன்கொண்டது. இதனைத் தயாரிக்க 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகின்றன. இதனைத் தயாரிப்பதற்கு அமெரிக்கப் பாதுகாப்புத்துறையின் தலைமையகமான பென்டகன் 2005ஆம்ஆண்டு மறுப்புத் தெரிவித்தபோதும் தற்போது இதற்கு அனுமதி அளித்துள்ளது.

எனினும் இச் செய்கோள் தயாரிப்புக்கு 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாவதை நாடாளுமன்ற உறுப்பினர்களும் பாதுகாப்பு வல்லுநர்களும் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றனர்.

# செயற்கை இரத்தக்குழாய்



அமெரிக்கா விஞ்ஞானிகள் செயற்கை முறையிலான இரத்தக்குழாயைக் கண்டு பிடித்துள்ளனர். மிகவும் நுண்ணிய முறையில் இச்செயற்கை இரத்தக்குழாய் அமைக்கப்பட்டமை இதுவே முதல் தடவை.

கண்டுபிடிக்கப்பட்ட செயற்கை இரத்தக்குழாய்களை முதலில் விலங்குகளுக்குப் பொருத்தப்பட்டு அது சீராக இயங்கும் பட்சத்தில் பின் மனிதர்களுக்குப் பொருத்தப்படும் என அறிவித்துள்ளனர்.

மனிதனின் உடலில் செயற்கை உறுப்புக்களைப் பொருத்தி சாதனை படைக்கும் இவ்விஞ்ஞான உலகத்தில் அடுத்த சாதனையாக நுண்ணிய செயற்கை இரத்தக்குழாய் பொருத்தும் முயற்சியும் வெற்றி பெறும் என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# கவரும் பனிச்சிற்பங்கள்



சீன நாட்டில் குளிர்காலத்தில் உல்லாசப் பயணிகளை ஈர்க்கும் முகமாக உருவாக்கப்படும் பனிச்சிற்பங்கள் பயணிகளைக் கவர்ந்து வருகின்றன.

சீனாவில் ஹைலோஜங் மாகாணத்தில் உள்ள ஷென்யோங் பகுதியில்தான் இந்த பனிச்சிற்பங்கள் அமைக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்படுகின்றன.


வருடம் ஒன்றுக்கு 5 கோடி உல்லாசப் பயணிகள் இங்கு வருகை தருகின்றனர். 2020ஆம் ஆண்டுக்கு முன்னர் சீனா, பிரான்சின் உல்லாச வருவாயை பின்னுக்குத் தள்ளி முதல் இடத்தைப் பிடிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# யோசவாஸ் அடிகளாரின் யாத்திரைத்தலப் பெருவிழா

இலங்கையின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படும் முத்திப் பேறுபெற்ற யோசவாஸ் அடிகளாரின் பெருவிழா யாழ.மறைமாவட்டத்தில் அவரின் பெயரில் அமைக்கப்பட்ட பண்ணை யோசவாஸ் அடிகளாரின் யாத்திரைத் தலத்தில் இன்று காலை 6.30 மணிக்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

பல்வேறுபட்ட கடின அனுபவங்கள் மத்தியில் யோசவாஸ் அடிகளார் சில்லாலையில் பணியாற்றியது பற்றி மறையாசிரியர் எஸ். ஆரோக்கியநாதர் அவர்களால் வெளியிடப்பட்ட சில்லாலைக் கதிரைச் செல்வியின் பொன்விழா சிறப்பு வெளியீட்டில் இருந்து சில பகுதிகளைத் தொகுத்துத் தருகின்றோம்.

ஒல்லாந்த அரசினது கழுகுக்கண்களுக்கும் அவர்களது ஒட்டுக்குழுக்களான கூலிப்படையினருக்கும் தப்பிப்பிழைக்க முடியாதிருந்ததால் அவர்



களின் பாதுகாப்பை முன்னிட்டு நகரிலிருந்து பத்து மைல் தூரத்திலுள்ள சில்லாலை என்னும் சிறப்பு மிகு கிராமத்திற்கு இவரை இடமாற்றினர். நூற்றுக்கு நூறுவீதம் கத்தோலிக்க மக்களைக் கொண்டிருந்த சில்லாலை இலங்கையில் உறுதியான விசுவாசத்தின் உறைவிடமாக இருந்தது. சில்லாலை கிராம மக்கள் கத்தோலிக்க விசுவாசத்திலும் ஒழுக்க வாழ்விலும் சிறந்து விளங்கி வாழந்து வந்ததனால் சில்லாலை சின்ன உரோமை எனப் பாராட்டப்பட்டு வந்தது.

சில்லாலை மூப்பரின் வீட்டில் தங்கியிருந்த அடிகளார் இரவு வேளைகளில் யாழ்ப்பாணத்திலிருந்த பல இடங்களுக்குச் சென்று கத்தோலிக்கர்களுக்குத் திருப்பணி புரிந்து திருப்பலி நிறைவேற்றிவந்தார். அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி திருவருட்சாதனங்களை நிறைவேற்றி கத்தோலிக்க மதத்தை விட்டு ஒல்லாந்த மதத்தைத் தழுவிய பலரையும் மனந்திருப்பினார்.

யோசவாஸ் அடிகளார் சில்லாலையில் தங்கியிருந்த காலத்தில் இவருக்கு ஏற்பட்ட வயிற்றோட்ட நோய்க்கு ஒரு மூதாட்டி அன்புடன் பராமரித்து வந்தார். எதிர்பாராத விதத்தில் அடி களார் குணமடைந்துதான் நோயிலிருந்து குணமடைந்தது அன்னைமரியாவின் அருளினால்தான் என்று கண்டுணர்ந்து அன்னையை ஆரோக்கிய மாதா மருந்துமாதா என அழைத்தார். குடிசைக் கோவிலாக அமைந்திருந்த அன்னையின் இருப்பிடத்தில் அவர் மூன்று ஆண்டுகள் தங்கியிருந்து பணியாற்றினார் என்பது வரலாறு கூறும் உண்மை.

சில்லாலையில் அடிகளார் தங்கியிருந்த காலத்தில் விசுவாசத்திற்காகப் போரிட்டதோடு பல அற்புதங்களையும் நிகழ்த்திக் காட்டினார். ஞாயிறு கடன் திருநாட்களில் கிறிஸ்தவர்கள் எவரும் சர்ரப்பிரையாசையான வேலைகள் செய்யக்கூடாது என்ற அக்காலத் திருச்சபைச் சட்டத்தை மீறி சமயக் கடமைகளைக் கடைப்பிடிக்காத "காயர் பிரஞ்சிப் பிள்ளை" என்பவர் ஞாயிறு திருப்பலியை அலட்சியம் செய்து வேலை செய்துவந்தார். ஒரு ஞாயிறன்று வழமைபோல ஆலயம் செல்லாது தனது வீடு மேய்தலை மேற்கொள்வதில் ஈடுபாடு காட்டிக் கொண்டிருந்தார். இதையறிந்த அடிகளார் வீடு மேய்தலை விட்டுவிட்டுத் திருப்பலிக்கு வரு மாறு சொல்லியனுப்பினார். அதற்குக் காயர் செவிசாய்க்கவில்லை. ஆத்திரமடைந்த அடிகளார் "காயர் வீடு தீப்பற்றி எரியட்டும்" எனச் சாப மிட்டார். உடனே அவரது வீடு தீப்பற்றி எரிந்தது. தனது தவ்றை உணர்ந்த காயர் அடிகளாரிடம் சென்று முழந்தாட்படியிட்டு மன்னிப்பு வேண்டினார். அடிகளார் தன்னிடமிருந்த சிலுவையைக் கழற்றி "இச்சிலுவை உம்மிடம் உள்ளவரைக்கும் குறையாத உணவும் புத்திர பாக்கிய மும் உண்டு" என ஆசீர்வதித்துக் கொடுத்தார்.

இந்தப் புனிதச் சிலுவையை தலைமுறை தலைமுறையாக காயர் பரம்பரையினரிடம் இருந்திருக்கின்றது. தற்போது இச்சிலுவையானது மடுத்திருப் பதியில் பணியாற்றும் திரு. மரியநாயகம் என்ற சில்லாலை மைந் தன் குடும்பத்தில் பாதுகாப்பாக வைக் கப்பட்டுள்ளது. அடிகளாரை நன்கு பராமரித்த சில்லாலை மக்களை, அவர் என்றும் மனதில் வைத்து திருச்சிலுவையைக் கொடுத்ததோடு, ஒரு பெரிய மட்பாண்டத்தையும், ஆசீர்வதித்துக் கொடுத்து இந்தக் கிராமத்தில் இறை அழைத்தல்களும் இறை ஆசீரும் என்றும் நிலைக்கும் என்று கூறிச் சென்றார். ஆனால் அவர் தந்து சென்ற மட்பாண்டத்திற்கு என்ன நடந் ததோ தெரியவில்லை? அவரது நினைவுச் சின்னமான திருச்சிலுவை இன்றும் இருப்பது கணகூடு. "இலங்கையின் திருத்தூதர்" என அருளாளர் பட்டத்தை யோசவாஸ் அடிகளார் பெற்றுக் கொண்டாலும் அவரை சில்லலை வாழ் மக்களின் "விசுவாசத்தின் காவலன்" என்று அழைப்பதே பொருந்தும்.

இலங்கை வாழ் தமிழ் மக்கள் துன்பத்திலும் நெருக்கடியிலும் இருக்கின்றவேளை யோசவாஸ் அடிகளாரின் பரிந்துரையால் இலங்கையில் அமைதியும் சமாதானமும் [illegible]

அருள்[illegible]

# மக்களின் இன்றைய உணர்வுகளை பிரதிபலித்த புகைப்படக் கண்காட்சி

## வளரும் கலைஞனின் நன்முயற்சி

சாதிக்கவேண்டும் என்ற துடிப்பும் இன்றைய இளைஞர் மத்தியில் அபரிமிதமாகக் காணப்பட்டாலும் அதற்கான வாய்ப்புகளும், வளவசதிகளும் துர்லபமாகவே காணப்படுகின்றன. இதற்கு இன்றைய நாட்டின் சோதனையான சூழ்நிலைகள் மட்டுமன்றி ஆதரவும் அரவணைப்பும் போதிய அளவு கிடைக்காமையும் காரணங்கள் எனலாம்.

இம் மாதிரியான ஒரு நிலைமையில் இளைஞர் ஒருவர் தனிமனித புகைப்படக் கண்காட்சி யொன்றை அண்மையில் நடத்திக் காட்டி சாதனை படைத்திருக்கிறார்.



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சித்திரமும் வடிவமைத்தலும் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறும் அருளானந்தம் அருள்சஞ்சித் என்பவரே துடிப்புள்ள அந்த இளைஞர். இவரது புகைப்படக் கண்காட்சியின் வெற்றிக்கு யாழ்ப்பாணம் நகர றோட்டரக்ட் கழகம் அனுசரணை வழங்கியிருந்தமை பாராட்டுக்குரியது.



யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடி பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் கடந்த 19ஆம் திகதியும் 20ஆம் திகதியும் ''விழிகளின் வழியே....'' என்ற தலைப்பில் இடம்பெற்ற இப்புகைப்படக் கண்காட்சியில் சுமார் 50 புகைப் படங்கள் இடம் பெற்றிருந்தன.

வடக்கு கிழக்கின் இன்றைய நிலைவரங்களை சித்திரிக்கும் படங்களுமலவும் வைக்கப்பட்டிருந்தன. அமைதிக்கும் ஆறுதலுக்குமாக ஏங்கி நிற்கும் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பவை யாகவும் அவை காணப்பட்டன. வாய் மொழியால், எழுத்தினால் எடுத்தியம்ப முடியாத பலவும் படங்களின் வழியாக மக்கள் கண்டு வியந்தனர். வளரும் ஒரு கலைஞனின் இம்முயற்சி பாராட்டுக்குரியது -பல்கலையில் பயின்று வெளியேறும் மாணவர்கள் தம் திறமைகளை மக்கள் மத்தியில் பரப்புரை செய்வதற்கு இவரது முயற்சி முன்னோடியாக அமைகிறது.

-நேசன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## புதுடில்லி நிர்வாகத்தை ஏமாற்றவும் மஹிந்தரின் அரசு திடசங்கற்பம்

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தும்படி சர்வகட்சி பிரதிநிதிகள் குழு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சிபார்சு செய்திருக்கின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இடைக்கால நடவடிக்கையாக அதனைச் செய்யும்படி அது வேண்டியிருக்கின்றது.

இத்தகைய வேண்டுகோளுக்கான காய்நகர்த்தல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சூழ்ச்சித் திட்ட தந்திர வேலை எனக் கடுமையாகச் சாடியிருக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இந்தக் காய் நகர்த்தலுக்கு ஆதரவு தெரிவிப்பது போல இந்தியா கருத்து வெளியிட்டிருப்பது குறித்தும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆழ்ந்த கவலையும் வருத்தமும் தெரிவித்திருக்கின்றது.

இருபது வருடங்களாக அரசமைப்பிலும் சட்டத்திலும் இருக்கின்ற ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு வேறு யாரும் சிபார்சு செய்யத் தேவையில்லை. நினைத்தால் தாமே - தம்பாட்டில் - அதனை அவர் நடைமுறைப்படுத்தலாம்.

ஆனால் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் அதிகாரப் பகிர்வுக்கு எதைச் செய்யலாம் என்று ஆராய்ந்து கொண்டிருந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவை அத்திசையில் நகர விடாமல் தடுத்து இடையில் இக்கட்டுத்தடை போட்டு பதின்மூன்றாவது திருத்தத்தோடு கட்டிப்போட்டுவிட்டார் ஜனாதிபதி மஹிந்தர்.

இப்போது இடைக்கால நடவடிக்கையாக அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான திசையில் ஆரோக்கியமாக நகர முடியும் என்றும், அவர் கதை விடுகின்றார்.

ஆனால் இது காலத்தை இழுத்தடித்து சர்வதேசத்தை ஏமாற்றும் சூழ்ச்சித் தந்திரோபாயம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டுகின்றது.

மஹிந்தர் அரசின் இந்த நகர்வுகளைப் பெயரளவிலேனும் வரவேற்றுள்ள இந்தியா கொழும்பின் இந்த நகர்த்தலுக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் பௌத்த- சிங்களப் பேரினவாதச் சூழ்ச்சித் திட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் இருப்பது - அல்லது புரிந்துகொள்ளாமல் இருப்பது போலக் காட்டிக் கொள்வது - வேதனைக்குரியது.

ஒரு லட்சம் துருப்புகளை இலங்கையில் நிலைநிறுத்தி தன்னுடைய கண் அசைவில் இயங்கும் பொம்மை மாகாண அரசு ஒன்றை வடக்கு , கிழக்கில் நிறுவி, தானே முன்னின்று நெம்பு போட்டுத் தள்ளியும், இந்த அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் சட்டமாக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கலை இங்கு நடைமுறைப்படுத்துவதை இந்தியாவினால் சாத்தியப்படுத்தவே முடியவில்லை.

சுமார் ஒன்றரை வருட காலம் புதுடில்லி அரசின் பிறபுல ஆதரவுடன் கொழும்போடு இழுபறிப்பட்டு, இயலாமல் போகவே வேறு வழியின்றி ஆதங்கத்தில்- விசனத்தில் - 'தனித் தமிழீழப் பிரகடனம்' செய்துவிட்டுத் தலைமறைவாக வேண்டிய நிலை புதுடில்லியின் பொம்மை மாகாண ஆட்சிக்கு ஏற்பட்டது.

அப்போது கொழும்பில் ஜெயவர்த்தனா அரசு நாடாளுமன்றில் மூன்றில் இரு பங்கு அறுதிப் பெரும்பான்மையுடன் மிக வலிமையாக இருந்தது. ஜனாதிபதி ஜெயவர்த்தனா முழுப் பலத்தோடும், வலுவோடும் இருந்தார். பௌத்த- சிங்களப் பேரினவாத சக்திகளின் சூழ்நிலைக் கைதியாக, அச்சக்திகளின் தாளத்துக்கு ஆடுபவராக அவர் இருக்கவில்லை. அந்த ஜெயவர்த்தனாவைக் கொண்டு, அரசமைப்பில் பதின்மூன்றாவது திருத்தத்தைச் செய்யப் பண்ணி அதைச் சட்டமாக்க வைத்த இந்தியாவினால் அதை நடைமுறைப்படுத்த வைக்க முடியவில்லை.

அதுவும் சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான துருப்புகளைக் கொண்டு இலங்கையின் ஒரு பகுதியை ஆக்கிரமிக்க வைத்து முழு அழுத்தத்தைப் பிரயோகித்தும் அதைச் செய்ய முடியவில்லை.

அப்படியிருக்க -

சிறுபான்மையினருக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்வது என்றாலே சீறிப்பாய்கின்ற பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகளிடம் அரசியலில் சூழ்நிலைக் கைதியாகச் சிக்கி, அந்தச் சக்திகளை நம்பி தமது அரசின் ஆட்சியைக் கொண்டு இழுக்கும் ராஜபக்ஷ தரப்பாகும். இப்போது அந்தச் சட்ட ரீதியான அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்தப் போகிறது என்று அறிவித்ததும் அதை இந்தியா நம்புவதும், நல்ல நடவடிக்கை என வரவேற்பதும் புரியவே முடியாத விடயங்களாக இருக்கின்றன.

அரசமைப்பின் பதின் மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது என்ற பெயரில் மஹிந்த அரசு நடத்தப்போகின்ற நாடகத்தில் ஏமாறப் போகும் முதல் கதாபாத்திரம் இந்தியாதான் போலும்.

அத்தகைய ஏமாற்றுதலுக்கு தானே முதல் இலக்கு என்பதை அந்தக் காய்நகர்த்தலை பகிரங்கமாக வரவேற்று விழுந்தடித்த அறிவிப்பு வெளியிட்டதன் மூலம் பாரதமே உறுதிப்படுத்தியிருக்கிறது.

அதிகாரப் பகிர்வை விரைந்து மேற்கொள்ளும்படி சர்வதேச சமூகம் ஜனாதிபதி மகிந்தருக்குக் கடும் அழுத்தம் கொடுத்து வருகையில், அதனைத் திசை திருப்பி காலத்தை இழுத்தடித்தது. சர்வதேசத்தின் கவனத்தை வேறு பக்கம் தள்ளி விடுவதற்காகவே இந்தக் காய் நகர்த்தலை முன்னெடுக்கின்றார் மஹிந்தர். அது புதுடில்லிக்குப் புரியாமல் இருப்பது இலங்கையின் சிறுபான்மை இன மக்களின் துரதிஷ்டமின்றி வேறில்லை.

# 'உதயன்' பத்திரிகைக்கு உரிய பாதுகாப்பு அளிக்க மன்னிப்புச் சபை வலியுறுத்து

## அத்தகைய கடிதங்களை அரசுக்கு அனுப்பவும் கோரிக்கை

கொழும்பு,ஜன.27

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகைக்கும் அதன் ஊழியர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதால் அந்நிறுவனத்துக்கும் ஊழியர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு வழங்கப்படுவதை உடன் உறுதிப்படுத்தும்படி சர்வதேச மன்னிப்புச் சபை பகிரங்க அறிக்கை ஒன்றின் மூலம் கோரியிருக்கின்றது.

அத்தகைய கோரிக்கையை இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா, பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா ஆகியோருக்கு அனுப்பி வைக்கும்படியும் சர்வதேச மன்னிப்புச் சபை பகிரங்க வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

'உதயன்' அலுவலகம் மற்றும் ஊழியர்கள் மீது அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் இந்தப் பகிரங்க அறிக்கையில் விரிவாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

ஊடகங்களுக்கு எதிரான இராணுவக் கெடுபிடிகள், ஊடகவியலாளர்கள் சிலர் 'துரோகிகள்' என இராணுவத்தளபதி அண்மையில் குறிப்பிட்டமை எல்லாம் இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளன.

உயிர் அச்சுறுத்தல் கருதி உதயனின் ஊடகவியலாளர் ஒருவர் கடந்த ஒருவருடத்துக்கு மேலாக 'உதயன்' அலுவலகத்துக்கு வெளியே செல்ல முடியாமல் இருக்கிறார் என்பதும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, பின்வரும் அம்சங்களை வலியுறுத்தி இலங்கை அதிகாரிகளுக்குப் பகிரங்கக் கோரிக்கைகளை விரைந்து அனுப்பி வைக்குமாறு சர்வதேசத் தரப்புகளை சர்வதேச மன்னிப்புச் சபை கோரியிருக்கின்றது.

* தொடர்ந்து தாக்குதலுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் 'உதயன்' உள்ளாகி வருவது குறித்துக் கவலையும் அதிப்தியும் தெரிவித்தும் -

* 'உதயன்' ஊழியருக்கு உரிய பாதுகாப்பை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளை வலியுறுத்தியும் -

* 'உதயன்' தொடர்பான அச்சுறுத்தல்கள், படுகொலைகள் உட்பட்ட கிரிமினல் குற்றங்களில் சம்பந்தப்பட்டோரை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளை வற்புறுத்தியும் -

* குடியியல், அரசியல் உரிமைகள் சம்பந்தமான சர்வதேசப் பட்டயம் தொடர்பாக இலங்கைக்குரிய கடப்பாடுகளை நிறைவு செய்யும் வகையில் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை மதித்துப் பேணுவதை உறுதிசெய்யுமாறு அதிகாரிகளைக் கோரியும் -

கடிதங்களை அனுப்புமாறு சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது.

அண்மைக்காலத்தில் 'உதயன்' பத்திரிகைக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரங்களை சர்வதேச மன்னிப்புச்சபை ஒவ்வொன்று ஒவ்வொன்றாக வரிசைப்படுத்திச் சுட்டிக் காட்டியுள்ளது.

(சி)

# அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு அறிக்கையில் தமது கட்சியின் பெயர் பயன்பட்டமை தவறானது

## மேலக மக்கள் முன்னணியின் செயலர் மறுப்பு

கொழும்பு,ஜன.27

அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையில் மேலக மக்கள் முன்னணியின் பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கின்றமை தவறானது - என மேலக மக்கள் முன்னணியின் செயலர் கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

பேராசிரியர் திஸ்ஸவிதாரண ஜனாதிபதிக்கு வழங்கியுள்ள அறிக்கைக்கு மேலக மக்கள் முன்னணி ஒருபோதும் பங்குதாரர் ஆக முடியாது. எமக்கு அதில் எந்தவிதமான உடன்பாடும் கிடையாது. எமது கட்சியின் பெயரையும் இந்தப் பட்டியலில் சேர்த்திருப்பது எம்மைப் பொறுத்தவரை ஒரு வருத்தத்துக்குரிய - தவறான செயற்பாடாகக் காண்கின்றோம்.

மூத்த பாரம்பரியம் மிக்க சமசமாஜவாதியான அமைச்சர் திஸ்ஸவிதாரணவே இதனைச் செய்திருப்பாரா என மேலக மக்கள் முன்னணி சந்தேகிக்கிறது.

13ஆவது அரசமைப்புத் திருத்தம் ஏற்கனவே சட்டமாக்கப்பட்டுள்ளது. அதை அமுல்படுத்தவேண்டியது அல்லது சட்டத்தில் உள்ளதை செயற்படுத்த வேண்டியது அரசின் விவகாரம். அதை அரசோ அமைச்சரவையோ அமுல்படுத்துவதற்கு அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் ஆலோசனையோ அறிக்கையோ தேவையில்லை.

அனைத்துக்கட்சி மாநாடோ அல்லது சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவோ ஆரம்பிக்கப்பட்டமைக்கு முக்கியமான விடயம் இனப்பிரச்சினை அல்லது வடக்கு - கிழக்கு தமிழர் பிரச்சினை ஆகும். இதற்கு கட்சிப் பிரதிநிதிகள் கலந்தாலோசித்து நியாயமான ஒரு புதிய தீர்வுத்திட்டத்தை புதிய அரசமைப்பு திருத்தமாக முன்வைப்பதற்கே ஆகும். இந்தச் செயற்பாட்டின் போது அரசமைத்த உபகுழுவும் அனைத்துக் கட்சி மாநாடும் தமிழ் மக்களிற்கும் - சர்வதேச சமுதாயத்திற்கும் பல எதிர் பார்ப்புகளையும் சைகைகளையும் - காட்டி வந்திருக்கின்றன.

• அவை அத்தனையும் இப்போது ஏமாற்று வித்தையாக காட்சியளிக்கின்றன.

ஏற்கனவே அரசமைப்பு சட்டத்தில் இருப்பதைப் பற்றி பேசுவதானால் 18 மாதங்கள் நீடித்த அமர்வுகளும் யோசனைகளும் - நடவடிக்கைகளும் தேவையற்ற ஒன்றாகி விடும். இதைச் செய்வதற்கு ஒரு தெரிவிக் குழுவோ அல்லது ஒரு நீதிபதி தலைமையிலான ஆணைக்குழுவோ போது மானது. இப்படிப் பார்க்கும் போது அரசு. அந்தப் பிரதி நிதிகள் குழுவை தெரிவுக் குழுவாகவே கருதியுள்ளது - எனத் தெரிவித்துள்ளார். (சி)

# சமயம் வெறுமனே பேச்சில் மட்டும் அடங்காது; வாழ்வில் சாதனைகளைப் புரிய வேண்டும்

## விவேகானந்தர் உலகுக்கு வழங்கிய உபதேசம்

**சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி உலகெங்கிலும் ஜனவரி மாதம் 29ஆம் திகதி இராமகிருஷ்ண மடங்களில் கொண்டாடப்படுகின்றது. அதையொட்டிய கட்டுரை இது.**

என் சொந்த வாழ்வில் ஏற்பட்ட ஓர் அனுபவத்தை கூறுகிறேன், கேளுங்கள். என்னுடைய குருதேவரான ஸ்ரீ ராமகிருஸ்ணர் மறைந்த போது நாங்கள் பன்னிரண்டு பேர். கையில் காலணா காசின்றி நிர்க்கதியாகி நின்றோம். அப்போது பலருக்கு எங்களைத் தெரியாது. சக்திவாய்ந்த இயக்கங்கள் எங்களுக்கு எதிராக நூற்றுக் கணக்கில் இருந்தன. முளையிலேயே எங்களைக் கிள்ளி எறியத் துடித்தன.

ஆனால் ஸ்ரீ ராமகிருஸ்ணர் ஒரு பெரும் உபதேசத்தை நன்கொடையாக எங்களுக்கு விட்டுச் சென்றிருந்தார். "வெறும் பேச்சளவில் நின்று விடாமல் ஆன்மீக வாழ்க்கையினை வாழ்ந்து வரவேண்டும். அதற்காக வாழ் நாள் முழுதும் போராட வேண்டும்" என்பதே அந்த உபதேசம் இன்று இந்திய நாடே ஸ்ரீ ராமகிருஸ்ணரை அறிந்துள்ளது. அவருக்கு மரியாதை செலுத்தி வருகிறது. அவர் வழங்கிய அமுத மொழிகள் தீயைப் போன்று நாடு முழுவதும் பரவி வருகின்றது. பத்து ஆண்டுகளுக்கு முன் அவருடைய பிறந்த நாள் விழாவிற்கு நூறு பேர்களைக் கூட என்னால் திரட்ட முடியவில்லை. போன ஆண்டோ ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டிருந்தனர்"

உண்மையான ஆத்மீக வாழ்வை 39 வருடங்கள் வாழ்ந்த உன்னத துறவிதான் சுவாமி விவேகானந்தர்.

ஏழைகளை சிவனாகக் காண பாய் என்று முதன் முதலில் முழங்கியவர்தான் சுவாமி விவேகானந்தர். சமயம் வெறும் பேச்சில் அடங்கா. சமய சாதனைகளை தீவிரமாக புரிந்து வாழ முற்பட்டதும் இவரை நாடி பலர் வருவார்கள். எப்படி என்றால் தாமரை மலர்ந்ததும் மிகவும் வசீகரமான வண்டுகள் வருவது போல் அந்த ஆத்ம சாதனனின் நிழலில் பலர் இருக்க ஆசைப்படுவார்கள். இந்தச் செய்தியை ஸ்ரீ ராமகிருஸ்ணர் உலகுக்கு ஈந்தார். சாஸ்திர, கோத்திர, சண்டையை



தவிர்த்து ஆத்மீக உயர்வுதான் தனி மனிதனின் குறிக்கோளாக அமைய வேண்டும். இந்த உன்னத வாழ்வுக்கு நிகராக உலகில் வேறு ஒன்றும் கிடையாது. பலர் பணம், பேர், புகழ் இவை பெற எவ்வளவு பிரயத்தனம் செய்கின்றனர். பிறகு விட்டில் பூச்சியைப் போல் செத்து மடிகிறார்கள். ஆகவே மனிதர் காலத்தை வீணடிக்காமல் எழுந்திரு! விழித்திரு! குறிசாரும் வரை விரைந்து செல்லுங்கள் என்று சுவாமி விவேகானந்தர் அழைக்கிறார்.

இந்த அழைப்பை இளைஞர்கள், யுவதிகள் செவிமடுப்பார்களாக, விஞ்ஞான வளர்ச்சி எதனைத் தந்து விட்டது. போலியான வாழ்க்கை, மாறாத உயிர் கொல்லி நோய், யுத்தம், கெடுபிடி, இவைதான் விஞ்ஞானத்தின் பிரதிபலிப்பு.

மேலை நாடுகளில் உள்ளோர் பலர் இந்தியாவுக்கு மன அமைதி தேடி வருகின்றனர். பலர் ஆச்சிரமங்களில் தஞ்சம் புகுந்துவிட்டனர். சில காலம் தங்கிச் சாதனைகள் புரிந்து பின்பு புதிய மனத் தெம்புடன் திரும்பி உன்னத புருஷர்களாக மீண்டும் வாழ்கின்றனர்.

சுவாமி விவேகானந்தர், தான் "15000 வருடங்களுக்கு தேவையான பொக்கிஷத்தை விட்டுச் செல்கிறேன்" என்று கூறியுள்ளார். ஆகவே மனிதர்கள் இன்னும் காலம் தாழ்த்தாது விரைந்து செயற்பட்டு பேரின்பம் அடைவார்களாக.

- சுவாமி சித்ரூபானந்தா.

## நாளை

| | |
|---|---|
| தை - 14 | திங்கட்கிழமை 28.01.2008 |
| நட்சத்திரம் : | அத்தம் பி.ப.:03.55 வரை |
| திதி : ஷஷ்டி | மு.இ.: 09.16 |
| சுபநேரம் : | 12.36 - 02.06 |
| ராகுகாலம் : | 08.06 - 09.36 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னையில் நடைபெற்ற கருத்துரிமை மீட்பு மாநாட்டில் கலந்துகொண்ட மக்களையும் பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

# விடுதலைப் புலிகள் ஏற்கனவே மாபெரும் சக்தி; ஆதரவளிப்பதால் அவர்களுக்கு பெரும் லாபம் இல்லை

## நேற்றைய மாநாட்டில் திருமாவளவன்

சென்னை,ஜன.27

சென்னையில் திட்டமிட்டவாறு கருத்துரிமை மீட்பு மாநாடு நேற்று இரவு இடம்பெறறது.

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் தொல் திருமாவளவன் தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது.

சென்னை அமைந்தகரை புல்லா அவனியூவில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் திரைப்பட இயக்குநர்களான சீமான், செல்வம், வி.சி.குகநாதன் மற்றும் சட்ட சபை உறுப்பினர்களான ரவிக்குமார், செல்வப்பெருந்தகை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளுக்கு நாங்கள் அளிப்பது தார்மீக ஆதரவுதான். நாங்கள் ஆதரவு தெரிவிப்பதால் புலிகளுக்கு பெரும் லாபம் இருக்காது. அவர்கள் ஏற்கனவே மாபெரும் சக்தி என்று திருமாவளவன் தெரிவித்தார்.

இந்த மாநாட்டின் மூலம் தமிழக அரசுக்கோ கருணாநிதிக்கோ இக்கட்டை ஏற்படுத்தும் நோக்கமும் எமக்கு இல்லை என்றும் கூறினார்.

தமிழ்நாட்டில் கருத்து வெளியிடும் உரிமையை தடை செய்யும் வகையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் கண்டித்து இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (அ-1)

## சிலாபத்தில் 9 பேர் கைது!

கொழும்பு ,ஜன.27

சிலாபம் நகரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நேற்றுச் சனிக்கிழமை நடத்தப்பட்ட தேடுதலில் சந்தேகத்தின் பேரில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை முதல் இந்தத்தேடுதல் நடத்தப்பட்டதாக சிலாபப் பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்களில் வவுனியா, மன்னார் உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்தவர்களும் அடங்குகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-1-2)

## தபால்பொதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் கப்பலில் ஏற்றப்பட்டன என்றும் இன்று யாழ்ப்பாணத்துக்கு வந்துசேரும் கப்பலில் இருந்து தபால்பொதிகள் இறக்கப்பட்டு நாளை விநியோகம் செய்யப்படும் என்றும் பிரதித் தபால் மா அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## ரூபவாஹினியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் மேர்வின் சில்வா அண்மையில் ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்தினுள் வைத்து தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இவர் முன்னின்று செயப்பட்டவர் எனச் சொல்லப்படுகிறது. (அ-2)

## நெடுந்தீவில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக மீனவர்களின் போராட்டங்கள் தொடர்பில் உரிய அமைப்புகள் ஊடாக தமிழக முதலமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் ஊர்காவற்துறை நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கப்பலில் பொருள்கள் காணாமற்போவதை தவிர்க்கும் வழிமுறைகள் ஆராய்வு

யாழ்ப்பாணம் ,ஜன.27

குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்படும் பொருள்கள் காணாமற்போகின்றமையைத் தவிர்க்கும் வழிமுறைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற உயர் மட்டக் கூட்டம் ஒன்றில் இது குறித்து நீண்ட நேரம் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், துறைமுக அதிகார சபை அதிகாரிகள், வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள், இராணுவ உயர் அதிகாரிகள், கப்பல் முகவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொருள்களைக் கப்பலில் ஏற்றும்போது பொருள்கள் களவாடப்படுகின்றமை, சேதமடைகின்றமை தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. இந்தப் பிரச்சினை கூடுதலாக கொழும்புத் துறைமுகத்தில் இடம்பெறுகின்றமையால் அது தொடர்பாக உரிய தரப்புக்களுடன் தொடர்பு கொண்டு அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதென அங்கு தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் பொருள்களை இறக்கிக் கொண்டு வரும்போதும் அவை களவாடப்படுவதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர். இதனையடுத்து காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து பொருள்கள் லொறிகளில் ஏற்றப்பட்டபின்னர் அவை உரிய முறையில் 'சீல்' வைக்கப்பட்டு களஞ்சியத்தில் இறக்கும்வரை அது அகற்றப்படாமல் இருப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. (அ-1-50)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதிகள் தெரிவுக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அரசாங்கம் விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கான நடவடிக்கையில் இறங்கும். புலிகள் மீதான தடை குறித்தும் அமைச்சரவையில் ஆராயப்படும் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் சென்ற 21ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி சொன்னவை

ஆனால் கடந்த 22ஆம் திகதி ஊடகவியலாளர்களைச் சந்தித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளைத் தடை செய்வது குறித்து முடிவு செய்யப்படவில்லை. உடனடியாக தடை செய்யவேண்டிய தேவை இல்லை என்று கூயிருந்தார்.

இலங்கையில் உள்ள பிரச்சினைக்கு தான் இராணுவத் தீர்வை நாடவில்லை என்றும் -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களுக்குள் இராணுவத்தை நகர்த்தி புலிகளை தோற்கடிக்கும் எண்ணம் தனக்கு இல்லை என்றும் -

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு இல்லை. இராணுவத் தீர்வில் எனக்கு நம்பிக்கை இல்லை. தற்போது வடக்கில் படை நடவடிக்கை வன்னிக்குள் முன்னேறுவதற்கான ஒன்றல்ல என்றும் - தெரிவித்திருந்தார். (அ-1)

## சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்புடைய தீர்வாக அமைய வேண்டும்.

அந்தத்தீர்வு ஜனநாயகம், பன்முகத்தன்மை, மனித உரிமைகள் ஆகியவற்றின் அடிப் படைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். இலங்கையின் ஐக்கியம், இறைமை, ஆள்புல ஒற்றுமை ஆகிய பேணப்பட வேண்டும். என்பது இந்தியாவின் நிலைப்பாடாகும் -

இந்தப் பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் உண்டாகி வரும் அபிவிருத்திகளின் பயன்களை இலங்கையும் பெறுவதற்கு இங்கு சமாதானமும் ஸ்திர நிலையும் உருவாக வேண்டும் என்பதிலும் இந்தியா அக்கறையாக உள்ளது -என்றும் இந்திய தூதுவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பஞ்சாட்சரம் குணேந்திரன்(வயது 21) என்பவரின் சடலம் என அவரது பெற்றோரால் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டது.

சடலத்தை பெற்றோர் அடையாளம் காட்டியதையடுத்து அவர்களிடம் சடலத்தை ஒப்படைக்குமாறு யாழ். மேலதிக நீதிவான் எஸ்.வசந்தசேனன் உத்தரவிட்டார். (அ-1)

## மட்டக்களப்பில் வேட்பாளர் கடத்தல்

மட்டக்களப்பு ,ஜன.27

மட்டக்களப்பு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அரசு - பிள்ளையான் குழு கூட்டணி சார்பில் வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்த ஒருவர் நேற்று முன்தினம் இரவு இனம் தெரியாத வர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

வேட்பாளரான சிவதாசன் சிவகுமார் என்பவரே கடத்தப்பட்டவர் என்று காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை -

மட்டக்களப்பு, ஈச்சந்தீவைச் சேர்ந்த கடற்தொழிலாளர் ஒருவர் நேற்று சனிக்கிழமை அதிகாலை அவரது வீட்டில் இருந்து கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

வவுணதீவு பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் வைத்து நல்லரத்தினம் யோகராசா (வயது 45)என்ற கடற்றொழிலாளியே இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டார்.

இவரை படையினருடன் இணைந்து இயங்குகின்ற ஒட்டுக்குழுவினரே கடத்திச் சென்றனர் என்ற சந்தேகம் பொது மக்கள் மத்தியில் நிலவுகின்றது. (அ-2)

## தையல் பயிற்சிக் கண்காட்சி

யாழ்ப்பாணம் ,ஜன.27

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வலி.தெற்கு உடுவில், வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் தையல் பயிற்சி கண்காட்சி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் நா. பஞ்சலிங்கம் தலைமையில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சு. முரளீதரனும் உடுவில் பிரதேச செயலாளர் செல்வி த.மஞ்சுளாதேவியும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட கிராம அபிவி ருத்தி அலுவலர் தா.தியாகமூர்த்தியும் கௌரவ விருந்தினர்களாக மல்லாகம் இலங்கை வங்கி முகாமையாளர் பே.பிரான்சிஸ், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன், மல்லாகம் கிராம அலுவலர் க.பூபாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர். (1-68)

## புதுக்குடியிருப்பில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதல் வெற்றிகரமாக நடத்தப்பட்டமையை விமானிகள் உறுதி செய்தனர் என்றும் விமானப் படைப் பேச்சாளர் விங்கொமாண்டர் அன்ரூ விஜயசூரிய தெரிவித்தார்.

இதற்கிடையில், விமானத் தாக்குதல் இடம்பெற்றவேளை கடற்புலிகளின் முக்கிய தலைவர்கள் கலந்துகொண்ட சந்திப்பு ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்ததாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. (அ-2)


NOW AVAILABLE
intel Pentium 4, Pentium D, Core 2 Duo, Celeron D Processors & Mother Boards
Kingston Memories, (DDR1s, DDR 2s & SDRAMs) Flash Drives, & Memory
hp IBM Branded Pcs, HIFI Laptos & Note Books
Brand New Intel P4 PC 40000/- Only
Scanners, Printers(Laser, Dot, InkJet & All in one), VGA Cards, Toners & ETCs
We are not Big but The Best
UNIT மனோகரா தியேட்டர் சந்தி 347, K.K.S Road, Jaffna 4590720, 0773134...

விக்னா கல்வி நிறுவனம் தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்
A/L DAY CLASS
வர்த்தக வகுப்புகள் மீண்டும் ஒரு புதிய பிரிவு
Eco - 7.15
Acc - 8.30-11.30
B.stu -
ஆரம்பம் 28.01.08

CHEMISTRY S.VASU
A/L 2008
பௌதிக இரசாயனவியல் Tue. 4.30p.m., Thur. 5p.m
ஆரம்பம் 29.01.2008 Tue. 4.30p.m.
A/L Day Class
அசேதன இரசாயனவியல் Mon-Thur- 11.30-1.00p.m
ஆரம்பம் 28.01.2008 Mon. 11.30 a.m.
நாவலர் பருத்தித்துறை வீதி,

Diploma in Computerized Accounting packages (DICAP) ACCPAC + Quick Book Pro + MY OB Teacher T.Lintus (H.N.Dip.in Acc)
IDM Computer Studies (PVT) Ltd Jaffna.

விக்னா கல்வி நிறுவனம் தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்
A/L DAY CLASS
கலைப் பிரிவு மீண்டும் ஒரு புதிய பிரிவு
Eco - 7.15
Log - 7.15
Tam - 8.30
H/c - 9.30
Geo - 7.15
Hin - 10.30
Hist -
P/sci - 9.30
Chri - 9.30
Drama - 11.30
ஆரம்பம் 28.01.08
தி.- வெள்ளி 7.15 மணி

நாவலர் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
A/L DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: 28.01.2008 (Mon)
Acc - 11.00 a.m
B.st - 1.00 p.m
Eco - 2.00 p.m
Tam - 8 a.m
Log - 6.30 a.m
Geo - 7.00 a.m
Hin - 9.00 a.m
P.sci - 11 a.m
Dra - 12.00 noon
His - 10a.m
Chri - 7.30 a.m


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.01.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.